# கலைச் செல்வி



# "போட்டோ" கலை உலகில்

## ஓர் அற்புதம்

என்றும் மறக்கமுடியாத வைபவங்களில்,

உங்கள் உருவங்களை

இயற்கை வர்ணங்களில்

உருவாக்கித்தருகிறோம்

வடமாகாணத்தில்

சுன்னுகம் **பிறின்ஸ்** ஸ்தாபனத்தாரால்

மட்டுமே இந்தக்கலை உருவாக்கப்படுகிறது

## Kodak - Extachrome

### கொடாக்-எக்ஸ்ராகுரோம்

### டெக்னிக் கலர் !!!

நினைவிருக்கட்டும்

சுன்னுகம் பிறின்ஸ்

போன்: 281

தந்தி: "ஜுவெல்லர்ஸ்"

மதிப்பிற் சிறந்த வைரங்கள்
அழகிற் சிறந்த ஆபரணங்கள்

யாவற்றிற்கும்

ஈழத்திருநாட்டில்
இணையற்ற ஸ்தாபனம்

# தங்க மாளிகை

யாழ்ப்பாணம்

நம்பிக்கை! நாணயம்! நயம்!
உத்தரவாதம்!

பெற்ற நகைகளை 30 வருடங்களாகச் செய்தளித்து
அமோக ஆதரவுபெற்ற நகை வியாபாரிகள்

# எல். கே. எஸ். ஜுவெல்லர்ஸ்

யாழ்ப்பாணம்

| | | | | |
|---|---|---|---|---|
| கிளைகள்: | கொழும்பு, | திருச்சி, | சென்னை, | காயல்பட்டணம் |
| போன்: | 5658 | 49 | 2321 | 23 & 24. |

# லங்கா நிதி லிமிற்றெட்

நிரந்தர சேமிப்புக்கு, கீழ்க் குறிக்கப்பட்ட வீதம்

## வட்டி கொடுக்கப்படும்.

1 வருடம் - 6 சத வீதம்.
2 வருடம் - 7 சத வீதம்.
3 வருடம் - 8 சத வீதம்.
5 வருடம் - 9 சத வீதம்.

சேமிப்பு கணக்கிற்கு

**வருடம்**
**5 சத வீதம் வட்டி கொடுக்கப்படும்**

நவீன சேமிப்பிற் சேர்ந்து பல நன்மைகளையும் அடையுங்கள்

இலங்கையில் விசேஷமாக ஏற்படுத்தப்பட்டது.

முழு விபரங்களும் இலங்கா நிதி ஆபீசில் அறியலாம்.

# இலங்கா நிதி லிமிற்றெட்

திருநெல்வேலி : : யாழ்ப்பாணம்.

கிளை :
284, காங்கேசன் துறை வீதி : : வண்ணார்பண்ணை

காலத்தின் ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும்போது

கவர்ச்சி மிக்க உங்கள் படம்

உங்களுக்கும் உங்கள் நண்பர்களுக்கும்

**களிப்பை உண்டாக்கும்**

அத்தகைய நல்ல படங்களை

நவீன யந்திர சாதனங்கள் பொருத்தப்பட்ட

**சுன்னுகம்**

# பிறின்ஸ் ஸ்ருடியோவில்

**எடுத்துக் கொள்ளுங்கள்.**

## எங்கள் புகைப்பட நிலையத்தில்

- பிளாஷ் லைட் போட்டோ
- புளொக்
- பிரேம் பண்ணுதல்
- சினிமா சிலைட்டுகள்
- கலர் போட்டோ

ஆகியவற்றை விசேட திறமையுடன் செய்து கொடுப்போம்.

# பிறின்ஸ்

**படப்பிடிப்பாளர்**

**கே. கே. எஸ். வீதி : : சுன்னுகம்**

# கலைச்செல்வி

# இந்த ஆண்டின் இலக்கிய விருந்து

## பாரதிக்குப் பின்

"ஸ்ரீவிமணி, நாமக்கல் கவிஞர், பாரதிதாசன், தங்கத்தாத்தா, முருகையன், மு' செல்லையா, மகாவிகவி, திருச்சிற்றம்பலக் கவிராயர் முதலிய பல கவிஞர்கள் பாரதிக்குப்பின் தோன்றியுள்ளனர். இவர்களுடைய கவிதையின் தரத்தை ஆராயும் விமர்சனத் தொடர் கட்டுரை விரைவில் ஆரம்பமாகின்றது. ஈழத்தின் பிரபல விமர்சகர் திரு. கனக செந்திநாதன் அவர்கள் எழுதுகின்றார்கள்.

## அண்ணாமலை நகரில்

இந்திய மக்களின் பண்பாடு எத்தகையது? இங்கிருந்து செல்லும் மாணவர்களுடன் அவர்கள் எவ்வாறு பழகுகின்றார்கள்? உயர் பதவிகளில் இருக்கும் அறிஞர்கள் வீட்டில் எப்படி வாழ்கின்றார்கள்? — இவற்றைப்பற்றி இலக்கிய நயத்துடன் தொடர்ந்து எழுதுகின்றார் வித்துவான் திரு. க. ந. வேலன் அவர்கள்.

## குறுநாவல்

பிரபல ஈழத்து எழுத்தாளர்கள் இருவரின் குறுநாவல்கள் இவ்வாண்டில் 'கலைச்செல்வி'யில் வெளியாகின்றன. எழுத்தாளர்களின் பெயர்கள் பின்னர் வெளியிடப்படும்.

## புதிய தொடர்கதை

இவ்வாண்டின் மத்தியிலிருந்து வாசகர்கட்குப் புதிய ஒரு தொடர் கதையை அளிக்கின்றோம். காதல், சோகம், விரக்தி, ஏமாற்றம் முதலிய பல உணர்ச்சிக் கொந்தளிப்புள்ள இக் கதையை ஈழத்து நாவலாசிரியர் ஒருவர் எழுதுகின்றார்.

இவைதவிர, அவ்வப்போது பல புதிய அம்சங்களையும். சுவை மிகுந்த சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் முதலியவற்றையும் இவ்வாண்டின் விருந்தாகப் படைக்கின்றோம்.

**இத்தனைக்கும் நீங்கள் கொடுக்கவேண்டியது**

4 ரூபா மட்டுமே

(கலைச்செல்வி — 11 இதழ்களும் ஆண்டு மலரும் கிடைக்கும்.)

உங்கள் சந்தாவை உடனே அனுப்புங்கள்.

## கலைச்செல்வி

### யாழ் தமிழ் இலக்கிய மன்றம்

கந்தரோடை : சுன்னாகம்

# கலைச் செல்வி

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்

--பாரதியார்.

கலை: 2 | விஹாரி—தை: 1960 ஜனவரி-பெப்பிரவரி | காட்சி: 2

## வாழ்க வகுப்புவாதம்!

இலங்கை நமது தாய் நாடு. நாம் தமிழர்கள். அவர்கள் சிங்களவர்கள். அவர்களைப்போல் நாமும் இங்கே சிறப்புடன் வாழவேண்டும். எல்லாத் துறைகளிலும் எமக்குரிய பங்கை நாம் அடைந்து அனுபவிக்கவேண்டும்.

இது வகுப்புவாதமாகுமா?

நமது மொழி செழிப்புறவேண்டும். நமது இலக்கியமும் கலைகளும் என்றென்றும் சிறந்தோங்கவேண்டும்.

இது குறுகிய மனப்பான்மையாகுமா?

நமது உரிமைகள் பறிக்கப்படும்போது நாம் எதிர்த்தே தீருவோம். அநியாயமாக நசுக்கப்படும்பொழுது போர் தொடுத்தே தீருவோம்.

இது தேசத்துரோகமாகுமா?

இல்லை; இல்லை; இல்லவே இல்லை.

தேச நலனைக் கருதுவோர் ஒரு தேசீய இனத்தைப் புறக்கணிக்கவேண்டுமென்பதில்லை. பரந்த மனப்பான்மை யுடையோர் தம் தனித்தன்மையை இழந்துவிடவேண்டுமென்பதில்லை.

நம் தாய்த்திருநாடு முன்னேற வேண்டுமானால், தமிழன் தமிழனாகவே வாழவேண்டும்; சிங்களவன் சிங்களவனாகவே வாழவேண்டும். தனித் தன்மையைக் காப்பது அவசியம். பொதுப்பணியில் ஒத்துழைப்பது இன்றியமையாதது. வேற்றுமைகள் தவிர்க்க முடியாதவை. அவற்றினூடே ஒற்றுமை காண்பது உயரிய பண்பு.

பொதுத் தேர்தல் வருகின்றது. நமது தலைவிதியை நாம் தான் நிர்ணயிப்போம்.

எதைத்தான் மறந்தாலும் ஒன்றை மட்டும் மறக்கக் கூடாது.

நாம் தமிழர்கள்.

இது வகுப்புவாதமென்றால், இந்த வகுப்புவாதம் அடியோடு வாழ்க.

---

# அன்பார்ந்த நேயர்களே!

வணக்கம். கலைச்செல்வியை இன்னமும் காணவில்லையே! எங்கே? சென்ற சில மாதங்களாக கலைச்செல்வி தாமதமாகவே வருகின்றது. ஏன்? பத்திரிகை வெளியிடுவதால் தங்களுக்குப் பண நஷ்டம் ஏற்பட்டால், சந்தாத் தொகையை அதிகரியுங்கள், ஆனால் பத்திரிகை வெளியிடுவதை மட்டும் நிறுத்தி விடாதீர்கள். இப்படிப் பல ரகமான கடிதங்கள் எமக்கு வந்த வண்ணமேயிருக்கின்றன. 'கலைச்செல்வி' எவ்வளவு தூரம் உங்களைக் கவர்ந்துள்ளாள் என்பதை அறியும் போது நாம் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியுமா?

அச்சகங்களிலே இப்போது வேலை நெருக்கடி அதிகம். உரிய காலத்தில் எதையும் செய்ய முடிவதில்லை. அதனாற்றான் 'கலைச்செல்வி'யும் தாமதமாக வெளிவருகின்றது. என்றாலும் விரைவில் இந்த நிலை மாறும் என்றே நம்புகின்றோம். ஒவ்வொரு ஆங்கில மாதம் 1ம் திகதியன்றே 'கலைச்செல்வி' வெளிவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம். இந்த இதழிலிருந்து 'கலைச்செல்வி'யின் தனிப்பிரதி விலை 25 சதமாகக் குறைக்கப்படுகின்றது.

ஒரு பத்திரிகை வளர்வதற்கு விளம்பரங்களே பெருமளவில் உதவி புரிகின்றன. உங்களுக்குத் தெரிந்த வியாபாரிகளிடம் 'கலைச்செல்வி' பற்றிப் பேசுங்கள். கலைச்செல்வியில் விளம்பரம் செய்வதால் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட வாசகர்கள் பயனடைவார்கள். அத்துடன் ஒரு தமிழ்ப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு உதவி செய்த பெருமையும் வியாபாரிகளை அடைகின்றதல்லவா?

இந்தப் புதிய ஆண்டில் நாம் செய்ய எண்ணியிருக்கும் சாதனைகள் பல. அவற்றைப் பிறிதோரிடத்தில் வெளியிட்டுள்ளோம். எந்தத் தமிழ்ப் பத்திரிகையும் செய்திராத வகையில் வளரும் எழுத்தாளர் மலரைச் சென்ற ஆண்டில் வெளியிட்டோம். இந்தியப் பத்திரிகையாளர் சிலரும் அம்முயற்சியை வரவேற்றனர். பெண் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கான சில ஏற்பாடுகளை இப்போது செய்து வருகின்றோம். விபரங்களை அடுத்த இதழில் வெளியிடுவோம்.

வணக்கம்.

— ஆசிரியர்.

# அவன் மனிதன்

அன்புமணி

கருணாகரன் ஜன்னலூடே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான். சிந்தனை ரேகைகள் அவன் முகத்தை முற்றுகையிட்டிருந்தன.

சாயந்தர வேளையாகையால் கல்லூரியின் விளையாட்டு இடங்கள் எங்கும் மாணவர்கள் உற்சாகமான விளையாட்டுகளில் ஈடுபட்டிருந்தார்

"ஏன் கருணாகரன் ஒரு மாதிரியாயிருக்கிறாய்? உடம்பு சரியில்லையா?"

"உடம்பு எல்லாம் சரிதான். ஆனால் மனதுதான் சரியாக இல்லை. இன்று வகுப்பில் நடந்த சம்பவத்தை நினைக்க நினைக்க......"

"ப்பூ! விட்டுத்தள்ளப்பா, அற்ப

"தடித்தகழுதை என்று திட்டினார் ஆசிரியர். "ஷட், அப்" என்றான் மாணவன். சீறிச் சினந்த ஆசிரியரைச் சாந்தப்படுத்தியது எது? ஒவ்வொரு மாணவனும் படித்துவிட்டுப் பாதுகாக்கவேண்டிய மணிக்கதை இது.

கள். பாட்மின்ட்ன் ஒரு புறம், டென்னிஸ் ஒரு புறம், வாலி பால் ஒரு கிரவுண்டில், பூட்பால் ஒரு கிரவுண்டில் ஏக அமர்க்களமாயிருந்தது.

இந்த சூழ்நிலையில் எந்த புஸ்தக புழுவும் கூட ஹாஸ்டலுக்குள் அடைந்து கிடக்கமுடியாது. அப்படியிருந்தும் கல்லூரி ஸ்போர்ட்ஸ் காப்டனான கருணாகரன் தனியே ஹாஸ்டல் அறையில் கிடந்து புழுங்கிக் கொண்டிருந்தான்.

"என்னப்பா நீ விளையாட வரவில்லையா? இந்த நேரத்தில் உள்ளே அடைந்து கிடக்கிறாயே?" அவனுடைய தனிமையில் குறுக்கிட்டான் நண்பன் கணேசன்.

"இல்லை கணேஷ்!" கருணாகரனின் சுருக்கமான பதில் அவனுக்கு வியப்பைத் தந்தது.

விஷயம்! இதற்குப் போய் மனதை அலட்டிக் கொள்ளுகிறாயே!"

"விட்டுத்தள்ள முடியவில்லையே கணேஷ். அது என் மனதை உறுத்திக் கொண்டேயிருக்கிறது."

"அட நீ ஒண்ணு. இதை விட எத்தனையோ பெரிய விஷயங்களெல்லாம் சர்வ சாதாரணமாய் நடக்கிறது இந்தச் சின்ன விஷயத்துக்காக இவ்வளவு தூரம் கவலைப் படுகிறாயே. வாவா டேபிள் டென்னிஸ் ஒரு ஆட்டம் போடலாம்,,

பார்க்கப்போனால் அன்று நடந்தது ஒரு அற்ப விஷயம்தான். ஆனால் கருணாகரன் அதைப்பற்றி இவ்வளவு தூரம் சிந்திப்பது கணேசனுக்கு மட்டுமல்ல அவனுடைய நண்பர்கள் எல்லோருக்குமே ஆச்சரியமாகத்தான் இருந்தது.

நடந்தது இதுதான்.

அன்று காலையில் அவர்களுடைய வகுப்புக்கு தமிழ் ஆசிரியர் சதானந்தம் வந்திருந்தார். பெயர்தான் சதானந்தமே தவிர அவர் சதா ஆனந்தமாக இருந்ததே இல்லை. அதற்குக் காரணமும் இருந்தது.

முனைக்கோட்டை அரசினர் கல்லூரி ஆரம்பத்தில் சிறிய பள்ளிக்கூடமாக இருந்து, பின்னல் உயர்தர பாடசாலையாக மாறியது. சதானந்தம் ஆரம்பத்திலேயே பாடசாலையிற் சேர்ந்தவர். ஆகையால் பள்ளிக்கூடம் உயர்தர பாடசாலையாக மாறிய பின்பும் அங்கேயே இருக்க அனுமதிக்கப் பட்டார். தமிழில் அவருக்கு நிறையைபுலமை இருந்ததால் போதிய தராதரப் பத்திரம் இல்லாமலிருந்தும், கலாசாலை எச். எஸ். ஸி, சர்வ கலாசாலையில்ப் பிரவேசவகுப்பு ஆகியவைகளுக்கும் அவரே தமிழ் வகுப்புகளை எடுத்தார்.

ஆனல் சம்பளத்தில் மட்டும் அவருக்கு உயர்வு ஏற்படவில்லை. அரசாங்கத்துக்கு வேண்டிய தராதரப் பத்திரம் அவரிடம் இல்லாதபடியால் சம்பளத்தை, செய்யும் வேலைக்கு ஏற்ப அதிகரிப்பதற்கு அரசாங்கம் மறுத்துவிட்டது. அவரிலும் பார்க்கத் தகுதி குறைந்தவரெல்லாம் நாலு கோணல் எழுத்துப் படித்திருந்தபடியால் அவரை விட அதிகமான சம்பளம் வாங்கினர்கள்.

அதுமட்டுமல்ல, அவர் ஒருதமிழ் வாத்தியார் ஆகையால் உயர்தர வகுப்பு மாணவர்கள் மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் மதிப்பை அவருக்குக் கொடுப்பதில்லை. 'இன்னும் சில நாட்களில் பி. ஏ. எம். ஏ. பட்டதாரிகளாக மாறப்போகும் நாம் கேவலம் இந்தச் சாதாரண வாத்தியாருக்கு மதிப்புக் கொடுப்பதா?' என்ற எண்ணம் போலும் அவர்களுக்கு.

இதனல் எல்லாம் சதானந்தத்திற்கு விரக்தி ஏற்பட்டிருந்தது. சதா சிடு மூஞ்சியாக இருந்தார். வகுப்புக்கு வந்தால் மாணவர்களைக் கரித்துக் கொட்டிக் கொண்டே இருப்பார். மாணவர்களின் ஆடம்பரத்தை அடிக்கடி குத்திக்காட்டுவார்.

அன்றும் அப்படித்தான் கிண்டல் ஆரம்பித்தது. முதல்நாள் கம்பராமாயணத்தில் ஒரு அழகான பாடலை மனப்பாடம் செய்வதுடன் அதன் பதவுரையையும் தெரிந்து கொண்டு வரும்படி கட்டளையிட்டிருந்தார் ஆசிரியர். இவ்வளவு பெரிய வேலையை அவ்வளவு உயர்ந்த வகுப்பில் உள்ள மாணவர்கள் செய்வார்களா? அது அவர்களுடைய கௌரவத்தைக் குறைத்து விடாதா?

அதற்குப் பதிலாக அப்பொழுது ஓடிக்கொண்டிருந்த சினிமாப் படத்திலிருந்து நாலு பாட்டை மனப்பாடம் செய்து கொண்டு வரும்படி சொல்லியிருந்தால் கன கச்சிதமாக சுருதி சுத்தமாகப் பாடிக் காட்டியிருப்பார்கள்.

எனவே அன்று ஆசிரியர் குறிப்பிட்ட கம்பராமாயணப் பாடலை பற்றிப் பிரஸ்தாபித்ததும் வகுப்பில் அமைதி நிலவியது. பின் வரிசையிலிருந்து மட்டும் முணுமுணுப்புத் தொடங்கியது. வகுப்பில் உள்ள ஹாஸ்ய சிகாமணிகள் தங்கள் கிண்டல் திறமையை பட்டும் படாதது மாக வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு மாணவன் சற்று உரக்கவே பேசிவிட்டான்.

'இந்தப் பாட்டுக்களைப் பாடமாக்கி என்ன பிரயோசனம்? நாமும் இவரைப் போல் பிச்சைக்கார வாத்தியாராகி விடவேண்டியது தான்' என்ருன் அவன்.

இதைத் தொடர்ந்து வகுப்பில் ஒரு சிரிப்பு அலை எழுந்தது. எரி

கிற நெருப்பில் எண்ணெயை விட்டது போலிருந்தது தமிழ் ஆசிரியர் சதானந்தத்திற்கு.

தன்னை மதிக்கிருர்களில்லை என்ற வருத்தம் ஒருபுறம், தன் பாடங்களை உதாசீனம் செய்கிருர்கள் என்ற வருத்தம் ஒருபுறம், தன் சம்பளத்தைப் பற்றிய குறை ஒருபுறம், இப்படியான விறகுகள் அவர் மனதில் சதா எரிந்துகொண்டே இருக்கும். தன்னுடைய மாணவர்களே தன்னைக் குத்திக்காட்டியதை அவருக்குத் தாங்கமுடியவில்லை. ஆத்திரத்துடன் மேசையில் தட்டினர். சிரிப்பு ஒருவாறு அடங்கியது.

சற்று நேரம் பொதுவாக வகுப்பைத் திட்டினர். பின்பு கருணகரனைப் பார்த்து "ஏன் பாடலை மனப்பாடம் செய்யவில்லை" என்று அதட்டலாகக் கேட்டார்.

அவர் இந்தக் கேள்வியை கருணகரனிடம் தான் கேட்பார் என்பது மற்ற மாணவர்களுக்கும் தெரியும். அதனல் சொல்லி வைத்தது போல். 'க்ளுக்' என்று சிரித்து விட்டார்கள்

கருணகரன் அந்த வகுப்பில் அமைதியான பையன் என்று பெயரெடுத்திருந்தான். மற்ற மாணவர்களைப் போலல்லாது ஆசிரியர்களுக்கு அவன் மிகவும் மதிப்பு கொடுத்திருந்தான். வகுப்பில் எந்த ஆசிரியர் எது சொன்னலும் எதிர்த்துப் பேசமாட்டான். தமிழ் ஆசிரியர் சதானந்தத்தைப் பொறுத்தவரையில் அவன் அடக்கம் இன்னும் ஒருபடி மேலாகவே இருந்தது. அதனல்தான் அவரும் தன் அதிகாரத்தைச் செலுத்துவதற்கு அவனைத் தேர்ந்தெடுத்திருந்தார். மற்ற மாணவர்களிடம் ஏதாவது கேட்டால் கண்டபடி எதிர்த்துப் பேசுவார்கள் என்பது அவருக்குத் தெரியும். கருணகரன் இல்லாவிட்டால் அவருக்கிருக்கும் கொஞ்சநஞ்ச அதிகாரமும் காட்டமுடியாமல் போய்விடும். பாவம் கருணகரன்!

"இல்லை ஸார், நான் பாடமாக்கினேன். மற்ற வேலைகளுக்கிடையே முழுவதும் பாடமாக்கிக் கொள்ள முடியவில்லை. இரண்டொரு அடி தட்டுப்படுகிறது. சீக்கிரம் பாடமாக்கி விடுவேன்....

ஓகோ: வேறு வேலைகளோ? அதற்குத்தான் பள்ளிக்கூடத்திற்கு வருகிறீர்களோ? உங்களுக்கு எதற்கடா படிப்பு? படிப்பிலே அக்கரையில்லை. ஆசிரியர் என்ருல் மதிப்பில்லை".

"ஸார் நீங்கள் இப்படிச் சொல்வதனல் என் மனம் மிகவும் புண்படுகிறது ஸார். உண்மையிலேயே நான்...."

"சரிதான் வாயை மூடுடா அதிகப்பிரசங்கி. எனக்கு எல்லாம் தெரியும். ஹாஸ்டலிலே தண்டச்சோறு சாப்பிட்டுவிட்டு வீண் பொழுது போக்குகிறது. அதிலே உள்ளம் வேறே புண்படுகிறதோ? உதவாக்கரைகள்!"

மற்ற மாணவர்களை மனதில்வைத்துக்கொண்டுதான் சதானந்தம் இப்படிச் சொன்னர். ஆனல் அவர்களோ அதைப் பொருட்படுத்தாமல் கருணகரனைப்பார்த்து ஏளனமாகச் சிரித்தார்கள். ஆசிரியரின் ஒவ்வொரு திட்டுக்கும் 'குபீர்' 'குபீர்' என்று பலத்த சிரிப்பு எழுந்தது. இடையிடையே 'டாம் டிஸ்க்ரேஸ்!" 'ஷேம்!" என்பது போன்ற பொன்மொழிகளும் மாணவர்களிடையேயிருந்து கருணகரனை நோக்கிப் பாய்ந்தன. முன் வரிசையில் இருந்த பெண்கள் அடிக்கடி திரும்பிப் பார்த்தது அவனுக்கு என்னவோ போல் இருந்தது

இந்த கேலிகளையும் அவன் பொருட்படுத்தவில்லை ஆனல் தான் செய்யாத, மனதாலும் நினைக்காத, குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வீணக வைகிருரே என்றுதான் அவன் உள்ளம் துடித்தது.

"ஸார், வீணுக நீங்கள் என்னைத் திட்டுகிறீர்கள்." என்ருன் அழமாட்டாக் குறையாக. 'குபீர்' என்று சிரித்தார்கள் மற்ற மாணவர்கள்.

சீறிப்பாய்ந்தார் ஆசிரியர், "திட்டாமல் உனக்கு வாழ்த்துப் பாடவேண்டுமோ தடிக்கழுதை; எருமை!'

"ஷட் அப்!" அலறினுன் கருணுகரன். எல்லோருக்கும் தூக்கி வாரிப் போட்டது, கருணுகரன் உள்பட.

திடுக்கிட்டுத் திகைத்த கருணுகரன் நாக்கைக் கடித்துக் கொண்டான். 'என்ன வார்த்தையைச் சொல்லிவிட்டோம்? இதை எப்படித்தான் சொல்லமுடிந்தது?, நாமா இப்படிப் பேசினேம்? இந்தக் கேள்விகள் அவன் சிந்தனையில் கணப்பொழுதில் விரிந்தன.

இதே கேள்விகளை ஒவ்வொருவருடைய உள்ளமும் தனக்குள் கேட்டுக் கொண்டது

அநீதியான திட்டுக்களால் அநியாயமாகத் தாக்கப்பட்ட கருணுகரன் தன்னையுமறியாமலே சொல்லத்தகாத வார்த்தையைச் சொல்லி விட்டான். ஆனுல் சொன்ன வார்த்தையை இனி எப்படி அழிப்பது? ஆண்டவனே என்னை மன்னிப்பாயா? என்று மனதுக்குள் வேண்டிக் கொண்டான்.

'புயலுக்குப் பின் ஏற்படும் அமைதியைப் போல் வகுப்பில் அதீத அமைதி நிலவியது. ஆசிரியர் ஒன்றுமே பேசவில்லை. ஏனெனில் அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சி இன்னும் நீங்கவில்லை. அப்படியே வகுப்பை விட்டுப் போய்விட்டார்.

பாடசாலை முடிந்தது.

மாணவர் கூட்டம் கூட்டமாக கருணுகரனிடம் பேச்சுக் கொடுத்தனர். அவனே யந்திரம் மாதிரி பதில் சொல்லிக் கொண்டிருந்தான். சிலர் அவனுக்கு ஆலோசனை வேறு கூறினுர்கள்.

"ஹூம்! நீயானுல் அவர் பேச்சை பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தாய். நானுக இருந்தால் கையில் கிடைத்ததை எடுத்து அவர் முகத்தில் வீசியிருப்பேன். எல்லாம் நீ நடந்துகொள்ளுகிறமாதிரி அப்பா. இல்லாவிட்டால் இவ்வளவுக்கு வந்திருக்குமா?"

"எங்களிடம் எப்போதாவது அவர் வாலாட்டியிருக்கிருரா? அவருக்குத் தெரியும் ஒட்ட நறுக்கி விடுவோம் என்று. சேச்சே! அவர் பேசியதைக் கேட்க, எனக்கே பொறுக்கவில்லை. நீ எப்படிச் சகித்துக்கொண்டிருந்தாயோ?"

"அவர் ஆசிரியராக இருந்தால் மட்டும் அப்படிப் பேசவேண்டுமா? நாம் என்ன அவருடைய அடிமைகளா? அந்தக் காலத்தில் தான் மாணவர்கள் மூட நம்பிக்கைகொண்டு முட்டாள்களாக இருந்தார்கள் என்ருல் இப்போதும் அப்படியே இருக்க வேண்டுமா என்ன? நீ சொன்னது அவருக்குப் போதாது அப்பா!"

இந்தப் பேச்சுக்களைக் கேட்ட கருணுகரனுக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. வெறுப்புடன் தனக்குள்ளே சிரித்துக்கொண்டான்.

மத்தியானம் டைனிங் ரூமில் எதையோ பறிகொடுத்தவன் போல் உட்கார்ந்திருந்தான் கருணுகரன். இதைக்கவனித்த அவன் நண்பன் ரத்தினம் "என்னப்பா குடியே முழுகி விட்டது போல் இடிந்துபோயிருக்கி

ரிப்போர்ட் செய்வார் என்று பயப்படு கிருயா? அதைப்பற்றிக் கவலைப் படாதே. அப்படிச் செய்தாரென்ருல் அவர் முகத்தில் சரியானபடி கரியைப் பூசிவிடலாம் ... ... என்ன யோசிக்கி ருய்? நாங்கள் எல்லோரும் சேர்ந்து நீ அப்படிச் சொல்லவேயில்லை என்று சாதித்துவிடுகிருேம். அவரு டைய ரிப்போர்ட்டுக்கு என்ன சாட்சி இருக்கிறது?" என்று கூறினன். அதை அவன் சகமாணவர்களும் ஆமோதித்தார்கள். ரத்தினம் பிற் காலத்தில் ஒரு லோயராக வருவானே என்னமோ யார் கண்டது!

அவர்கள் பேச்சு கருணகரனுக்கு வேதனையளித்தது "நான் அவரி டம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள லாம் என்று நினைக்கிறேன் ரத்தி னம்' என்ருன் தாழ்ந்த குரலில்.

"சேச்சே! முட்டாள்தனமாகப் பேசாதே அப்பா. அப்படி மன்னிப்பு கேட்டுக்கொண்டால் தவறை நீயே ஒப்புக்கொண்டதாகிவிடும். இதற்கு என்ன தண்டனைதெரியுமோ?உடனே டிஸ்மிஸ்தான்!"

"அப்படி நீ மன்னிப்புக் கேட் டுக்கொண்டாயோ எங்கள் மானமே போய்விடும்".

"இந்தப் பிச்சைக்கார வாத்தியா ருக்காக ஏன் இப்படிப் பயந்து சாகி ருய்? எத்தனைபேர் அவரை அவர் காது கேட்கவே "யூஸ்லெஸ் கேஸ் டாம் பூல், இடியட்! என்றெல்லாம் திட்டியிருக்கிருர்கள். கீழ்வகுப்பு மாணவர்கள்கூட எத்தனையோ தடவை மட்டந் தட்டிவிட்டு 'கம்' என்று இருக்கிருர்கள். நீ போய் மன்னிப்புக் கேட்கிறேன் என்கி ருயே?"

"தவறு செய்தால் மன்னிப்புக் கேட்பதில் தவறில்லையே" என்ருன் கருணகரன் மீண்டும்.

"என்னப்பா பிரமாதமான தவறு? அவர் நடந்துகொண்ட மாதிரிக்கு நீ செய்தது பத்து முறை யும் சரி. பேசாமல் உன்பாட்டில் இரு. எதுவந்தாலும் நாங்கள் பார்த் துக்கொள்ளுகிருேம்"

"நான் மன்னிப்புக் கேட்கப் போவது அவர் பிரின்ஸிபலிடம் ரிப் போர்ட் செய்வார் என்பதற்காக அல்ல, ரத்தினம். என்னுடைய மனச்சாந்திக்காகத்தான். அவரிடம் நான் மன்னிப்புக் கேட்காவிட்டால் என்னல் வேறு ஒருவேலையிலும் மன அமைதியுடன் ஈடுபட முடியாது. மனச்சாட்சி என்னைச் சதா சித்திர வதை செய்துகொண்டேயிருக்கும். அதேபோல் அவருடைய மனதையும் இச்சம்பவம் சதா புண்படுத்திக் கொண்டேயிருக்கும்"

ஹூம்! என்னப்பா வேதாந்தம் பேசுகிருய்? இந்தக் காலத்தில் நேர் மைக்கு இடமில்லை என்பதுதான் உனக்குத் தெரியுமே. நீ அப்படிச் செய்துவிட்டால் உடனே உன் நேர் மையை மெச்சினேன், இதோ பரிசு!" என்று கூறுவார் என்று நினைக்கி ருயா? அதெல்லாம் கதைகளில் நடக் கும். நிஜ வாழ்க்கையில் நேர்மாருக இருக்கும். இன்னும் ஒருபடி மேலே சீறி விழுவார். அத்துடன் நில்லாமல் நீ நன்ருகப் பயந்துவிட்டாயென்று எண்ணி இதற்குமுன் "ரிப்போட்" செய்யவேண்டும் என்று எண்ணி யிருக்காவிட்டாலும் இப்போது பிரின் ஸிபலிடம் போய்விடுவார்".

"அதைப்பற்றி நான் கவலைப்பட வில்லை. என்னுடைய ஆத்ம திருப் திக்காகவும் மனச்சாந்திக்காகவும் நான் இதைச் செய்தேயாகவேண்டும்.

"கருணகரன் நீ வகையாக மாட் டிக்கொள்ளப் போகிருய். நான் இப் பவே சொல்லிவிட்டேன். யோசித் துச் செய்!".

நண்பர்கள் போய்விட்டார்கள். இத்துடன் அவன் தன் எண்ணத்தை மாற்றிக்கொள்வான் என்றுதான் அவர்கள் எண்ணியிருந்தார்கள் ஆனால் இன்னமும் அவன் அதைப் பற்றியே வருந்திக்கொண்டிருக்கிறானென்பது இப்பொழுதுதான் அவர்களுக்குத் தெரிந்தது. விளையாடக் கூடப் போகாமல் இப்படிக் கிடந்து வீணாக மனதை அலட்டிக்கொள்ளுகிறானே முட்டாள் என்று அவர்கள் அனுதாபப்பட்டார்கள். மீண்டும் அவனுடைய முட்டாள்தனத்தைச் சுட்டிக்காட்டிப் பல புத்திமதிகள் சொல்லிப் பார்த்தார்கள். ஒன்றும் பிரயோசனமில்லை. இப்படியும் ஒரு பைத்தியம் இருக்குமா?" என்று எண்ணிக்கொண்டே அவர்கள் போய் விட்டார்கள்.

கருணாகரனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒன்றும் செய்யாமலிருக்கவும்முடியவில்லை. உள்ளத்தில் குடைச்சலிலிருந்துவிடுபடுவதற்காக,ஷெல்பிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்தான். அது காந்தியடிகளின் 'சத்திய சோதனை." இவன் பிரித்த பக்கம் அப்படியே மனத்தை இழுத்துப் பிடித்தது.

காந்தியடிகள் சிறுவயதில் சுருட்டுக் குடிப்பதற்காக வேலைக்காரனின் பணத்தில் திருடியும்' சகோதரனின் கைக்காப்பிலிருந்து தங்கம் திருடியும் செலவழித்து பின் தவறை உணர்ந்து தந்தையிடம் மன்னிப்புக் கேட்ட விதத்தைப் பற்றி எழுதியிருந்த உருக்கமான பகுதி அது. அதைப் பலமுறை படித்தான் கருணாகரன்.

அந்தக் காட்சி அவன் மனக் கண்முன் தெரிந்தது. சரிகைக் குல்லாயணிந்த குழந்தை தன் தவறுகளை எழுதி மன்னிப்புக் கோரும் கடிதத்துடன் மெல்ல மெல்ல நடந்து வந்து நோயாகப் படுத்திருந்த தந்தையிடம் கடிதத்தைக் கொடுத்துவிட்டு தலைகுனிந்த வண்ணம் நின்று கொண்டிருக்கிறான். தந்தை கடிதத்தைப் படித்து விட்டு சீறி எழவில்லை. தலையில் அடித்துக் கொள்ளவில்லை. மௌனமாகக் கண்ணீர் உகுக்கிறார். குழந்தை காந்தியின் கண்களிலும் நீர் வழிகிறது, அந்த அன்புக் கண்ணீர்த் துளிகளினால் அவர் இதயம் பரிசுத்தமாகிறது.

கருணாகரன் கண்களிலும் நீர் வந்துவிட்டது. காந்தி பிறக்கும் போதே மகாத்மாவாகவா பிறந்தார் சாதாரண மனிதனாகத்தானே பிறந்தார். அவர் சத்தியத்தில் மனச்சாட்சியில் வைத்திருந்த பயபக்தியே அவரை மனிதருள் தெய்வமாக, மகாத்மாவாக மாற்றியது என்றால் மிகையாகுமா?

பின்வரும் வார்த்தைகள் அவன் உள்ளத்தில் ஆழப் பதிந்தன:-

> "அவருடைய சாந்தம் ஆச்சரியகரமானதாயிருந்தது. நான் ஒளியாது என் குற்றத்தை ஒப்புக்கொண்டதே இதற்குக் காரணம் என நம்புகிறேன். மன்னிப்பதற்கு உரியவர் ஒருவரிடம் குற்றத்தை ஒளியாது ஒப்புக்கொள்வதுடன் இனிமேல் குற்றம் செய்வதில்லையென்றும் உறுதி மொழி கறுவதுதான் மிகத்தூய கழிவிரக்கமாகும்".

சட்டென்று புத்தகத்தை மூடினான் கருணாகரன். வெளியேவந்து தமிழாசிரியரின் அறையை நோக்கி வேகமாக நடந்தான்.

ஹாஸ்டலோடு சேந்தாற்போல் வடக்குப்புறமாகக் கட்டப்பட்டிருந்த தனி விடுதியில்தான் தமிழாசிரியர் இருந்தார். அவர் விடுதிக்கு முன் பக்கம் பூச்செடிகள் அழகாக வளர்க்கப்பட்டிருந்தன. அதன் மத்தியில் ஒருபெரிய வேப்பமரம் குளிர்ந்த நிழலைக் கக்கிக் கொண்டிருக்கும்.

இந்த வேப்பமரத்தின் கீழ் ஒரு நாற்காலியைப் போட்டு உட்கார்ந்தபடி ஏதாவது புத்தகம் அல்லது பத்திரிகை படித்துக்கொண்டிருப்பார், அவர். ஆனால்இன்று அவரை அங்கே காணவில்லை. அவரும் இன்றைக்கு அறைக்குள்தான் அடைந்து கிடக்கிறாரோ?

கருணாகரன் கதவை மெல்லத் தட்டினான். உள்ளேயிருந்து ''யாரது?'' என்றகுரல் கேட்டது. கருணாகரன் உள்ளேபோனான். ஒருகணம் அவனை ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்த்துவிட்டு மறுகணம் முகத்தைத் திருப்பிக்கொண்டார் ஆசிரியர்.

“என்னை மன்னியுங்கள் ஸார். உண்மையில் நான் அப்படிப் பேச வேண்டும் என்று நினைக்கவேயில்லை. என்னையறியாமலே அந்தவார்த்தை வெளிவந்துவிட்டது. அந்த வார்த்தையைச் சொன்ன அடுத்தகணமே ஒரு ஆசிரியரைப்பார்த்து இப்படிச் சொல்லியிருக்கக் கூடாதென்பதை உணர்ந்து கொண்டேன். தயவு செய்து என்னை மன்னியுங்கள்!”

சீறி விழுந்தார் சதானந்தம். அவர் குணம் எப்பவுமே இப்படித்தான். “உங்கள் கபட நாடகமெல்லாம் எனக்குத் தெரியுமடா. எவ்வளவு நேரமாக இந்த வசனங்களை மனப்பாடம் செய்துகொண்டிருந்தாயோ? இந்தயோசனையைத்தான் உன் நண்பர்கள் சொல்லிக் கொடுத்தார்களோ?”

கருணாகரனுக்கு மிக மிக வருத்தமாக இருந்தது. தன் உள்ளத்தின் உண்மையான எதிரொலியை இவர் நம்ப மறுக்கிறாரே!

சம்பிரதாயத்துக்காக நான் இந்த மன்னிப்பைக் கேட்கவில்லை ஸார். உண்மையாக என் உள்ளத்தின் அடியிலிருந்து இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறேன். இந்தச் சம்பவம் நடந்தநேரம் தொடக்கம் இந்தநிமிஷம்வரை என் உள்ளம் படாதபாடு பட்டுவிட்டது. இதைமட்டும் நீங்கள் உணர்ந்து கொண்டால் போதும்.”

“எல்லாம் தெரியுமடா எனக்கு. எனக்கே காது குத்துகிறாயே? பிரின்ஸிபாலிடம் ரிப்போர்ட் செய்வதற்குள் வந்து சமாதானம் செய்து தப்பிக்கலாம் என்றுதானே ஓடிவந்தாய்? ஹூம்’ இப்படிவிஷயங்களைச் சும்மா விட்டால் பள்ளிக் கூடத்தின் மானமே போய்விடும். பிரின்ஸிபாலிடம் போகத்தான் போகிறேன். நீ சொல்ல வேண்டியதை அங்கேயே வந்து சொல்லிவிடு.”

இளகின இரும்பைக்கண்டால் கொல்லன் குஷிக்குக் கேட்பானேன்! இல்லாவிட்டால் எத்தனையோ துஷ்டப் பையன்களின் நேரடியான தாக்குதலுக்குக் ‘கம்’ மென்று இருப்பவர் இந்த அப்பாவி கருணாகரனிடம் இப்படி எரிந்து விழுவாரா? அது மட்டுமல்ல கருணாகரனின் பேச்சை அவர் நம்பவில்லை. அவன் சும்மா நடிக்கிறான் என்றே அவர் எண்ணினார்.

கருணாகரனுக்கு அழுகையே வந்துவிடும்போலிருந்தது. “பிரின்ஸிபலிடம் ரிப்போர்ட் செய்வீர்கள் என்பதற்காக நான் மன்னிப்புக் கேட்க வரவில்லை. என் மனதுக்கு அமைதி வேண்டித்தான் உங்களிடம் வந்தேன்...”

“ஓகோ! பெரியமகான். உள்ளம் வருந்தி மன்னிப்புக்கேட்க வந்தாயோ! இரு உன் நடிப்பையெல்லாம் பொய்யாக்கி விடுகிறேன்!” இப்படிக் கூறிவிட்டு அந்த நிமிஷமே பிரின்ஸிபலின் அறையை நோக்கி நடந்தார் ஆசிரியர்.

சிறிதுநேரத்தில் பியூன்வந்து கருணாகரனை பிரின்ஸிபாலின் அறைக்கு அழைத்துச் சென்றான்.

தமிழ் வாத்தியாரைக் கண்டபடி மாணவர்கள் கிண்டல் செய்வது பிரின்ஸிபாலுக்குத் தெரியும். உயர் வகுப்பு மாணவர்கள் அவருக்குக்கீழ்ப் படியாமல் நடப்பதும் அவரை எதிர்த்

துப்பேசுவதும்கூட அவருக்குத்தெரியும். அதனுல் கருணுகரன் எவ்வளவு சொல்லியும் பிரின்ஸிபல் அவன்மேல் கருணே காட்டவில்லே. தண்டனே அளித்தேவிட்டார். அதுவும் எப்படிப்பட்ட தண்டனே?

பகிரங்கப் பிரம்படி, அத்துடன் பாடசாலேயை விட்டு நீக்கம்!

அடுத்த நாட்காலே வழக்கமாக நடைபெறும் காலேக்கூட்டத்தில் இந்த வைபவத்தை நடத்தப்போவதாக அறிவித்துவிட்டு எழுந்துபோய் விட்டார். அதற்குமேல் சொல்வதற்கு எதுவும் இருக்கவில்லே.

அரை நிமிஷத்தில் இந்த விஷயம் ஹொஸ்டல் முழுக்கப் பரவிவிட்டது. ரத்தினமும் அவன் நண்பர்களும் மறுபடியும் கருணுகரனேப்பிடித்துக்கொண்டார்கள்.

"நான் அப்பவே சொன்னேனே கேட்டாயா? மனச்சாந்திக்காக மன்னிப்புக் கேட்கப்போகிறேன். என்ருய். இப்போது பார்த்தாயா?" என்ருன் ரத்தினம்.

"முட்டாள்தனமாக நடந்துகொண்டாயே கருணுகரன். ஏன்அவரிடம் மன்னிப்புக் கேட்கப் போனுய்? இப்போதுபார் அவர்செய்த தவறுகள் அத்தனேயும் மறைந்து விட்டன. அவரால் நீசெய்த சிறு தவறுமட்டும் பூதாகாரமாக வாயைப் பிளந்துகொண்டு நிற்கிறது."—இது கணேஷ்.

"அவர் அவ்வளவு கடுமையாக நடந்து கொண்டிராவிட்டால் நீ அந்தத்தவறு செய்திருக்க மாட்டாயல்லவா? பார்க்கப்போனுல் இப்போது உனக்கு இந்தக் கெட்டபெயர் ஏற்பட்டதற்குக் காரணம் அவர்தானே. இவ்வளவு காலமும் நல்ல பிள்ளேயாக நடந்துகொண்ட உன்னே திடீரென்று கெட்டவனுக்கியது அவர்தானே. இப்போது தெரிகிறதா அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டது எவ்வளவு பெரிய மடத்தனமென்று?"

"சேச்சே; இந்தத் தமிழ் வாத்தியார் சுத்த நன்றி கெட்டவரப்பா. இவ்வளவு நாளும் நீ எவ்வளவு பவ்யமாக அவருடன் நடந்துகொண்டாய். கடைசியில் அன்றைக்கு அவர் உன்னே ஒரு வேலேக்காரனேப் பேசுவதுபோல் பேசிய போதெல்லாம் கையைக்கட்டிக்கொண்டு நின்ருய். அப்படியிருந்தும் பார் இப்போது உன்னேத்தான் குற்றவாளியாக்கி யிருக்கிருர்"

கருணுகரனுல் ஒன்றும் பேச முடியவில்லே. மௌனமாக இருந்தான். அவன் மனம் மட்டும் அமைதியில்லாமல் தவித்துக் கொண்டிருந்தது. அவன் தன்னே டிஸ்மிஸ் பண்ணுவதைப் பற்றியும், பகிரங்கப் பிரம்படியைப் பற்றியும் அவ்வளவு கவலேப்படவில்லே. தான் தவறை உணர்ந்து மனப் பூர்வமாக மன்னிப்புக்கேட்டுக் கொண்டதை ஆசிரியர் நம்பவில்லேயே என்றுதான் வருந்திஞன். இந்த விஷயமே அவன் உள்ளத்தை அரித்துக்கொண்டிருந்தது.

'எவ்வளவு ஒழுங்காக இவ்வளவு காலமும் நடந்து கொண்டோம். இருந்தும் கடைசியில் கெட்டபெயர் தானே நமக்குக் கிடைத்திருக்கிறது. அது மட்டுமா? பப்பிளிக் கேனிங், டிஸ் மிஸல், பிளாக் சேர்டிபிகேட்! நம்மைவிட கேவலமாக நடந்து கொண்டவர்களெல்லாம், நிதம் அடிதடி சண்டை நடத்துபவர்களெல்லாம் 'வெரிகுட்' சேர்டிபிகட் வாங்கிப் போயிருக்கிருர்கள். ஆனுல் நம்முடையகதி? உண்மையிலேயே ரத்தினம் சொன்னதுபோல் இந்த உலகில் நேர்மைக்கு இடமில்லேயா? பரவாயில்லே நம்மைப் பொறுத்த வரையில் நாம் நேர்மையாக நடந்து கொண்டோம். அதன் பலன் என்ன வானுலும்சரி. கவலேயில்லே. ஆனுல்... ஆனுல்... நம் நேர்மையை பிரின்ஸிபாலும் தமிழாசிரியரும் என்ருவது

ஒருநாள் உணர்ந்து கொள்ளவேண்டும். அவ்வளவுதான்?

என்ருவது ஒருநாள் பிரின்ஸிபாலும் தமிழாசிரியரும் நமது நேர்மையை உணர்ந்து கொள்வார்கள் என்று அவன் அந்தராத்மாகூறியது.

இந்த ஒரு எண்ணமே கொந்தளித்துக் கொண்டிருந் அவன் மனதுக்குச் சிறிது ஆறுதல் கொடுத்தது. மனத்தை ஒருவாறு சமாதானப்படுத்திக்கொண்டான்.

பொழுது புலர்ந்தது.

எல்லோரும் அந்த முக்கியமான நிகழ்ச்சியையே எண்ணியும் பேசியும் எதிர்பார்த்துக்கொண்டும் இருந்தார்கள்

மாணவர்கள் யாவரும் கருணுகரனை மிகப்பரிதாபத்துடன் நோக்கினர். நண்பர்கள் தங்கள் அனுதாபத்தை அடிக்கடி தெரிவித்துக்கொண்டனர். அசெம்பிளி காலை எட்டரை மணிக்குக் கூடுவதாக இருந்தது. ஆனுல் அதற்கு முன்பே சிறு சிறு 'அசெம்பிளி'கள் ஆங்காங்கு நின்று இந்த விஷயத்தைப் பற்றிச் சர்ச்சை செய்து கொணடிருந்தன.

கருணுகரனைச்சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் இருந்துகொண்டேயிருந்தது. ஆயிற்று, எட்டு முப்பது அடித்தது. அசெம்பிளி கூடத் தொடங்கியது. மாணவர்கள் பிரின்ஸிப்பலின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அந்தச்சமயத்தில் இரண்டு மாணவர்கள் அவசர அவசரமாக வந்து கருணுகரனின் கையைப்பற்றி ஒரு பக்கமாக அழைத்துக்கொண்டு சென்றனர்.

"இதோபார் கருணுகரன், தப்புவதற்கு ஒருவழி! பிரின்ஸிபலிடமோ தமிழ்வாத்தியாரிடமோ 'ஷட் அப்' என்ற வார்த்தையை உபயோகித்தேன் என்றுநீயாகச் சொல்லவில்லை. 'அந்தச்சம்பவம், அந்தச்சம்பவம்'' என்றே எல்லோரும் இதுவரை பேசிக்கொண்டு வந்திருக்கிருர்கள். அப்போது 'ஷட்டப்' என்ற வார்த்தையை நீ உபயோகிக்கவில்லை, என்று சொல்லு. நாங்களும் அப்படியே சொல்லுகிருேம். வகுப்பிலுள்ள அத்தனை மாணவர்களுக்கும் கேட்கவில்லை, தமிழாசிரியருக்கு மட்டும் எப்படிக்கேட்டது என்று திருப்பியடித்துவிடலாம். வீணுக இதைக் கற்பித்திருக்கிருர் என்று அவரைப் பொய்யனுக்கி விடுவோம். அப்படியாஞல் ஏன் இதை முன்பு சொல்லவில்லை என்று கேட்டால் 'ஆசிரியருக்குக் கீழ்ப்படியாத குற்றத்தை மனதில் வைத்துக்கொணடுதான் மௌனம் சாதித்தேன். என்று சொல்லிவிடலாம். என்ன சரிதானே? வா இப்போதே பிரின்ஸிபலிடம் போவோம்." நண்பர்கள் அழைத்தார்கள்.

"ஆமாம்பா இந்தக் குற்றத்தை மட்டும் இல்லாமல் செய்துவிட்டால் அப்புறம் புரட்சி செய்து டிஸ்மிஸலைத் தடுத்துவிடலாம்."

"நீ சரியென்ருல் எப்படியோ பிரின்ஸிபலிடம் முறையிட்டு, மற்ற ஆசிரியர்களைப் பிடித்துக் காரியத்தைச் சாதித்து விடலாம். வீண் வேதாந்தம் பேசிக்கொண்டிருந்தால் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்ள வேண்டியதுதான்."

கருணுகரன் மெதுவாகச் சிரித்துவிட்டுக் கூறினுன். "அதைநான் விரும்பவில்லை ரத்தினம். எப்படியோ தவறு நடந்துவிட்டது. அப்படிச் செய்திருக்கக் கூடாதென்பதை நான் மனமார உணர்கிறேன். அதையே தமிழாசிரியரிடமும் பிரின்ஸிபாலிடமும் கூறினேன். அவர்கள் அதை நம்பவில்லை ஆனுல் என்ருவது ஒரு நாள் அவர்கள் என் நேர்மையை உணர்ந்து கொண்டால் போதும். பிரம்படியையோ, டிஸ்மிஸலையோ பற்றி நான் இப்போது கவலைப்பட

வில்லை. ஏனெனில் நான் நேர்மையாக நடந்துகொண்டேன் என்ற எண்ணம் எனக்கு மனச்சாந்தியை அளித்திருக்கிறது!"

நண்பர்கள் திகைத்தார்கள். அப்புறம் பேசுவதற்கு என்ன இருக்கிறது? மௌனமாக அந்த இடத்தை விட்டு அகன்றார்கள். அகில உலக பாடசாலைகளின் சரித்திரத்திலேயே இப்படி ஒரு மாணவன் இருப்பது இதுதான் முதல் தடவை என்று அவர்கள் எண்ணியிருக்கலாம்.

கருணாகரனின் முகத்தில் அமைதியான ஒரு புன்னகை அரும்பியது அவனும் அசெம்பிளியில் போய்ச் சேர்த்து கொள்வதற்காகக் காலடி எடுத்து வைத்தான். அப்போது ஒரு கரம் அவன் கையை எட்டிப்பிடித்தது. கருணாகரன் திரும்பிப் பார்த்தான். தமிழாசிரியர் சதானந்தமும் காலேஜ் பிரின்ஸிபாலும் நின்று கொண்டிருந்தார்கள்.

சதானந்தம் அவனது இரு கைகளையும் வாத்ஸல்யத்துடன் பிடித்துக் கொண்டு, "கருணாகரன்! சற்றுமுன் இங்கே நடந்த குட்டி நாடகத்தை நாங்கள் கேட்டுக் கொண்டுதான் இருந்தோம். உன்னுடைய நல்ல குணத்தை அறிந்துகொள்ளாத நான் தான் உன்னிடம் மன்னிப்புக்கேட்க வேண்டும். என்னை மன்னித்து விடப்பா. உனக்கு ஒரு உள்ளமிருக்கிறது. அதற்கு நீ கட்டுப்பட்டு நடக்கிறாய். நீதான் மனிதன். எதிர்காலத்தில் நீ சிறந்து விளங்குவாய்" என்று ஆசீர்வதித்தார் தழுதழுத்த குரலில். அவர் கண்களில் நீர் துளித்திருந்தது. அவரது விரக்தி நிறைந்த இருபது வருட ஆசிரிய வாழ்க்கையில் அவர் முதல் முறையாக உள்ளம் நிறைந்த மகிழ்ச்சி யெய்தினார் என்பதையே அந்த அன்புக் கண்ணீர் கூறியது.

பிரின்ஸிபல் அன்புடன் அவன் தோளில் தட்டினார். அவர் வேறு ஒன்றும் பேசவில்லை. அவருடைய கனிவு நிறைந்தபார்வை அவர் கருத்தைத் தெரிவித்தது.

அன்றுகாலை அஸெம்பிளி நடக்காமல் போகவில்லை. நடக்கத்தான் நடந்தது. ஆனால் அதில் கருணாகரனைப் பற்றிய பாராட்டு மொழிகள் இடம்பெற்றன. அவனை உதாரணமாகக்காட்டி மற்ற மாணவர்களுக்குப் போதனை நடத்தினார் பிரின்ஸிபால்.

இந்தக்காலத்தில் நேர்மைக்கு இடமில்லை என்றுயார் சொன்னது? பொய்க்கும் மெய்க்கும் ஏற்படும் போராட்டத்தில் முதலில் பொய் ஜயிப்பதுபோல் தோன்றினாலும் கடைசியில் உண்மை வெற்றி பெறுவது சத்தியமே என்பது எவ்வளவு பெரிய உண்மை!

---

## சந்தா விபரம்

கலைச்செல்வி தனிப்பிரதி சதம் 25

வருடச் சந்தா, ஆண்டுமலர் உட்பட ரூபா 4

கீழ்க்கண்ட முகவரிக்கு உங்கள் மணி ஓடர்கள் -- போஸ்டல் ஓடர்களை அனுப்புக.

நிர்வாகி

மே-பா. கலைச்செல்வி

கந்தரோடை : : சுன்னாகம்.

சிறந்த பொருட்கள் குறைந்த விலையில்

## எங்கே பெறலாம்?

# சுன்னுகம்

# குடாநாட்டு வர்த்தக மாளிகையிற்

பெறலாம்

இங்கே பெறக்கூடிய முக்கிய பொருட்கள்.

## கட்டிடப் பொருட்கள்

சீமெந்து
இரும்புச் சிலாகை
நீர்ப்பாய்ச்சல் இரும்புக் குழாய்
மற்றும் இரும்புக் குழாய்கள்
கம்பி ஆணி
மலக்கூடு, குளிக்கிற அறை அமைக்கும் பொருட்கள்
சீமெந்து சீற்
நிலக்காவி
வாணீஸ்
வட்ட இரும்புக் கம்பி
பி. ஆர். சி. கம்பிவலை
முள்ளுக்கம்பி
சங்குப்பிரி ஆணி
பிணைச்சல்
தகரம்
கோழிக்கூட்டு வலை
தாட்பாள்
சுவர்க்காவி
பூச்சு மை
சொலிக்னம்
அரக்குக்கடுதாசி

பிறென்ச் பொலிஷ் முதலியன

## விவசாயக் கருவிகள்

மண்வெட்டி
கத்தி
கோடரி
பிக்கான்
அலவாங்கு
புத்துவெட்டி

### தச்சுவேலைக் கருவிகள்

வாள் உளி சீவுளி நாயிரும்பு முதலியன

### இல்லாள் கருவிகள்

அம்மி
தோசைக்கல்லு
குளவி
தாச்சி
ஆட்டுக்கல்லு
முதலியன

ஒரே விலை, சட்ட நிறை
தவரு நிலை, எங்கள் மறை.

# குடாநாட்டு வர்த்தக மாளிகை

கே. கே. எஸ். வீதி :: சுன்னுகம்.

# யாழ்ப்பாணம்
# ஐக்கிய இலாப நிதி

--*1918* -ம் ஆண்டு ஸ்தாபிதமானது--

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா

இதுவரை கொடுக்கப்பட்ட பங்குப்பணம் 616313. 00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணம் கட்டு முறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமான 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த கால முடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 8 விகிதமும் 6 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பிரீயல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியுலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விஷேச ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக
அறிந்து கொள்ளலாம்

**எஸ். கனகசபை**
சிருப்பர்.

# வளருந் தமிழ்

இந்து இளைஞன் : கொழும்பு இந்து வாலிபர் சங்க வெளியீடு நிர்வாக ஆசிரியர் திரு. எம். சிவசிதம்பரம். தனிப்பிரதி விலை: 50 சதம்,·

மதமாற்றமும் உலோகாயதமும் அதிதீவிரமாகப் பரவிவரும் இந்நாளில் சமய உண்மைகளைச் சிந்திப்பதற்கே நேரமில்லாது மனிதன் அவதிப்படுகிறான். மனிதன் மனிதனாக வாழ்வதற்குச் சமயம் நல்லதோர் வரம்பாக அமைந்திருக்கிறது. "சமயம் மனிதனை விலங்கினத்தினின்றும் பிரிக்கின்றது" என்பது தமிழ்த் தென்றல் திரு, வி. க. அவர்களுடைய பொன்னுரையாகும். ஆகவே இன்றைய சூழ்நிலையில் சமயப்பணி மிக மிக அவசியமாகும். அப்புனிதத் தொண்டை இளைஞர்கள், — அதுவும் நாகரீகம் மிகுந்த கொழும்பு மாநகரில் வாழுகின்ற இளைஞர்கள் ஏற்றிருக்கின்றார்களென்றால் அதை யாராலும் பாராட்டாது இருக்கமுடியாது,

கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தார் வெளியிட்டுள்ள கார்த்திகை மாத இதழ் எமது பார்வைக்குக் கிடைத்தது. ஈழநாட்டிற் பிரசித்தி பெற்ற தேவாலயங்களை ஈழ நாட்டுப் புற உருவப் படத்தில் ஆங்காங்கே பொறித்த அட்டைப்படம் மலரை அழகு செய்கின்றது. ஈழநாட்டில் இத்தனை பிரசித்திபெற்ற தேவாலயங்கள் உண்டோ என்று திகைப்படையும் இந்துக்கள் இன்றும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள். அத்தகையோரின் அறியாமையைப் போக்க இவ்வட்டைப்படம் மிகுந்த வாய்ப்பை அளிக்கின்றது.

இனி, மலரினுள்ளே செல்வோம். தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆசிரியர் எழுதிய தலையங்கம் இன்றைய நிலையில் நாம் செய்யவேண்டிய பெரும் பணிகளை விளக்கி, கவி யோகி சுத்தானந்த பாரதியார் கூறும் 'உய்வழி இதுவே" என உணர்ந்து "மதுகை ஆதினம் திருப்பெருந்திரு ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் சொல்லும் "ஆலயங்களில் கூட்டுப் பிரார்த்தனையின் அவசியத்" தை யறிந்து, திருமுருக கிருபானந்த வாரியார் காட்டும் 'புலவருடைய திறம்' தெரிந்து, சேர் கந்தையா வைத்தியநாதன் எழுதும் "திருக்கேதீஸ்வர" வரலாற்றைப் படித்து, டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் "திருக்கோவலூரை"க் கண்டு "சௌந்தரம்" அவர்களின் "அன்பும் துணையும்" அறமென அறிந்து குல. சபாநாதன் காட்டும் "திருக்கார்த்திகை விளக்கீடு" பார்த்து, கே. பி. ஹரன் தொகுத்த "இலங்கை மக்களுக்கு மகாத்மா காந்தி உபதேசம்" படித்து, சுவாமி சிவானந்தஜி யின் 73 வது பிறந்த தினத்தன்று சொல்லிய, Wanted Love, Compassion and Co-operation" ஆசிகள் பெற்று இன்புறலாம்.

காரைநகர் மணிவாசகர் சபையினரால் வெளியிடப்பட்ட மணிவாசகர் மலரிலுள்ள காணுதலும் பேணுதலும்" என்னும் கட்டுரையைப் பிரசுரித்துவிட்டு 'மறுபிரசுரம்' என்பதைக் குறிப்பிடாமல் விட்டதைத்தான் ஒரு குறையெனச் சுட்டிக்காட்டலாம்.

இம்மலரிலுள்ள கட்டுரைகள் அத்தனையும் வரவேற்கத் தக்கன. சமயப் பத்திரிகைகள் வாங்கிப் படிப்பதற்கு ஆசைப்படுபவர்கள் இன்று மிகக் குறைவு. அத்தகையவர்களும் வாங்கிப் படிக்கக்கூடியதாக இம்மலர் வெளியிட்ட இளைஞர்களைப் பாராட்டுகிறோம்.

— நம்பி

முத்துச் சரம்: ஆசிரியர் : இளந்திங்களன். வெளியிடுவோர்: முத்துக்குவியல், 180, லோவர் வீதி, பதுளை.

மலைநாட்டிலிருந்து வெளிவரும் இலக்கிய இதழ் முத்துச்சரம். மலைநாட்டிலுள்ள இளம் எழுத்தாளர்களின் உள்ளங்களை ஊக்குவிக்கும் நோக்கமாக அமைந்துள்ளது. இம் மலரில் இளம் எழுத்தாளர்களின் உணர்ச்சியூட்டும் கட்டுரைகளும், பேனா மன்னர்களால் படைக்கப்பட்ட சில சிறு கதைகளும் உண்டு.

'மலர் மங்கை' — என்ற படைப்பு புதுமையான (முறை, உணர்ச்சியை எழுப்பி உள்ளத்தை உருக்குகின்றது. இன்னும் பல புதுமைகளைப் புகுத்தினால் நல்ல வரவேற்பிருக்கும்.

— தியாகன்

**ஷேக்ஸ் பியர் நாடகக் கதைகள் : தொகுதி : ஒன்று. எழுதியவர்: திருமதி. அ. மயில்வாகனம், ''மாலினி பாங்ஸ்'' உருமபிராய். விலை; 2 ரூபா**

பிறநாட்டுப் பேரறிஞரின் படைப்புக்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்பது தமிழ்ப் பற்றுடையோரின் பெருவிருப்பாகும். இந்த விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் உலக மகாகவி ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் சிலவற்றை திருமதி அ. மயில்வாகனம் அவர்கள் தமிழில் கதை வடிவாகத் தந்துள்ளார்கள். கதை சொல்லும் பாணியிலும், தமிழ் நடையிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. பல இடங்களில் ஆங்கில வசன அமைப்பின் சாயல் தெரிகின்றது. ஆங்கிலத்தில் எற்கனவே படித்தவர்கட்கு அலுப்பையும், இப்போது முதன் முதலாகப் படிப்பவர்கட்கு மயக்கத்தையும் தருகின்றது நடை. என்றாலும் புதிதாகப் படிக்க விரும்புபவர்கள், ஓர் ஆசிரியரின் உதவியுடன் படித்தால், நன்கு சுவைக்கலாம். எழாம் எட்டாம் வகுப்புக்களில் இந்நூலை துணைப் பாடப்புத்தகமாக உபயோகிக்கலாம். ஆசிரியையின் முயற்சியைப் பாராட்டுகிறோம்.

(— சி .ச)

# வாசகர் போட்டி

## 10 வரிகள் : : 10 ரூபா

சென்ற ஆண்டில் இலங்கையில் திரையிடப்பட்ட படங்களுள் உங்களுக்குப் பிடித்தது எது? ஏன்? விமர்சன ரீதியில் பத்து வரிகட்கு மேற்படாமல் எழுதியனுப்புக. வாசகர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். சிறந்த விமர்சனத்திற்குப் பத்து ரூபா பரிசு உண்டு. பரிசு பெறுபவரின் பெயரும், சிறந்த விமர்சனமும் அடுத்த கலைச்செல்வியில் வெளிவரும்.

முடிவு திகதி: **20 - 2 - 60.**

தபாலுறையின் மேல் கீழ்க்காணும் முகவரியைக் கத்தரித்து ஒட்டி அனுப்புக.

**வாசகர் போட்டி**

**மே. பா. கலைச்செல்வி**

கந்தரோடை சுன்னாகம்.

# விளக்கேற்றிய வித்தகன்

தேவன் - யாழ்ப்பாணம்

1931 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18ந் திகதி இரவு அமெரிக்காவிலுள்ள மின்சார விளக்குகள் யாவும் அணைந்தன. யந்திரக் கோளாறு, மரம் முறிந்து விழுந்துவிட்டதா, புயலும் மழையுமா, உருகிகள் (Fuse) 'பறந்து' விட்டனவா, நிலத்துக்கு கீழேயுள்ள கம்பிகளில் ஏதாவது மக்கரா என்று மக்கள் தடிபிடிதாயப்படவில்லை. ஜனதிபதி, கூவரின் பிரகடனப்படி ஒரு நிமிஷ நேரம் அமெரிக்கா இருட்டில் மூழ்கியது. ஆம்! 52 ஆண்டுகளுக்கு முன் மின்சாரதீப மேற்றிய விஞ்ஞான மேதையின் அந்திம யாத்திரையின்போது அமெரிக்கா செலுத்திய அஞ்சலி அது. ஒளி வீசும் ஜோதி, இருளை நீக்கிய இரசவாதி, வெளிச்சம் தந்த வேதியன், சுடரமைத்த சாத்திரி, விளக்கைப் படைத்த விற்பன்னன் இரவைப் பகலாக்கிய மந்திரவாதி தோமஸ் அல்வா எடிசன்.

ஐந்து வயதிலேயே வாத்து முட்டைகளின்மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு 'பொரிக்கமாட்டேன் என்கிறதே" என்று பத்து மணி நேரம் விறைக்க விறைக்க உட்கார்ந்திருந்த விளையும் பயிரை பெற்றோர் 'கட்டிக் காவிக்" கொண்டு வீட்டுக்குப் போனார்கள். விடிந்ததும் பையன் வாத்து முட்டைகளின்மீது பிடிவாதமாக திரும்பவும் வந்து உட்கார்ந்து கொண்டான்.

பத்து வயதிலேயே அவன் போக்குக்கெல்லாம் தாயார் விட்டுவிட்டாள். அவன் விஞ்ஞான வேட்கை வெறியாகியது. அவனுடைய பரிசோதனைகளுக்கு பணம் வேண்டியிருந்தது. வியாபாரத்திலிறங்கினான். ஓடும் ரயிலில் பழமும் பானமும் தின்பண்டமும் விற்கத் தொடங்கினான். ஓடும் ரயிலில் ஏறும்போது காதைப் பிடித்து தூக்கிவிட்டான் ஒரு 'கார்டு". காது போச்சு! பதினெட்டு வயதுக்கு முன்பே பீரங்கிச் செவிடானான். சாகும்வரை காது கேட்க கருவியெதையும் உபயோகிக்கவில்லை.

பெயரும் புகழும் பெற்றபின் விருந்துகளுக்குப் போனால் நீண்ட பிரசங்கங்கள் நடக்கும். மறுநாள் பத்திரிகைகளில் பிரசங்கங்களைக் படித்துவிட்டு 'இத்தனை விழலையுமா உளறினார்கள்? அங்கேதான் நான் உட்கார்ந்திருந்தேன். நல்லவேளை ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை. இந்த லட்சணத்தில் கேட்டல் கருவி எதையாவது உபயோகிக்கும்படி என்னிடம் சொல்கிறார்களே" என்று நகைப்பான்.

கிராமபோனைக் கண்டுபிடித்தவனுக்கு காது செவிடு என்றால் வியப்பாயில்லையா? ஒரு இசைத் தட்டு ஒலிப்பதிவின்போது உலகப் பிரசித்திபெற்ற ஒரு வயலின் வாசிப்பவர் சுதியைத் தவறவிட்டு விட்டார்

"எப்படி மின்விளக்கேற்றுவது என்று திட்டம் போடவே ஐந்தாண்டுகள் ஆயிற்று. ஒவ்வொன்றும் 300 பக்கங்களுள்ள 200 குறிப்புப் புத்தகங்கள் நிரம்பின.

என்று இச் செவிடன் குறிப்பிட்டான். வயலின் வித்துவான் இல்லையென்று வாதாடினர். இசைத்தட்டைப் போட்டுப் பார்த்தால் எடிசன் சொன்னது சரியாயிருந்தது. எடிசன் தன் பற்களை கிராமபோன் பெட்டியில் அழுத்தி வைத்துக் கொண்டு காதினல் கேட்டறியமுடியாத ஒலி வேறுபாடுகளை கிரகித்துக் கொள்வான்.

எடிசன் கண்டுபிடித்த புதுமைகள் அனந்தம். அவற்றுள் முக்கியமானவை கிராமபோன் சினிமா (சலனப் படம்) மின் விளக்குகள் ஆகிய மூன்றுமாகும். அடிக்கடி அயல் வீடுகளில் அலறுகிற ஒலி பெருக்கியில், பேசுவதற்கு உபயோகப்படும் 'மைக்' கை கண்டுபிடித்தவனை திட்டவேண்டும் போலத் தோன்றினல் எடிசனைத்தான் திட்ட வேண்டும்.

எப்படி மின்விளக்கேற்றுவது என்று திட்டம்போடவே ஐந்தாண்டுகள் ஆயிற்று. 200 குறிப்புப் புத்தகங்கள் நிரம்பின. ஒவ்வொன்றும் 300 பக்கங்களுள்ளவை! 1879 ஆம் ஆண்டு பொதுமக்களுக்கு மின் விளக்கேற்றி கண் காட்சிகாட்டினன். புதுவருடத்தன்று 3000 மக்கள் கூடி நின்று வேடிக்கை பார்த்தார்கள். அதன் பின் நியூயோர்க் பட்டினத்தில் ஒரு சதுரமைல் பரப்புக்கு ஒளி அளிக்க வழி வகுத்தான். 1882 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 4ந் திகதி திங்கட்கிழமை அகில உலகத்தின் கவனமும் நியூயோர்க் பக்கமாக திரும்பியது. 80 000 அடி நீளமுள்ள கம்பிகள் மூலம் தரைக்குக் கீழே மின்சாரம் பாய்ந்து ஆங்காங்கேயுள்ள மின் விளக்குகள் பிரகாசிக்கவேண்டும். ஆளி (ஸ்விட்ச்)யை அழுத்தினன். 'பட்டப்பகல்' போல் பிரகாசித்தது அப்பிரதேசம். எடிசனுக்கு மாபெரும் வெற்றி.

ஒரு நாள் ஒரு நண்பன் 'ஜீவி தசக்கரம்' என்னும் பொம்மையை எடிசனுக்கு பரிசளித்தான். ஒரு சக்கரத்தைச் சுழற்றினல் உள்ளே படங்கள் பல சுற்ற ஆரம்பிக்கும். படத்தில் காணப்படும் உருவம் ஜீவன் பெறும். இதை வைத்துக் கொண்டே கனவு கண்டான் எடிசன். நாலு ஆண்டுகள் உழைப்பின் பயனக சினி கமரா பிறந்தது. கிராமபோனும் இக்கமராவுமாக சேர்ந்து பேசும்படத்தின் அத்திவாரமாயிற்று. சொல்லப் போனல் முதல் சினிமா முதலாளி—தயாரிப்பாளன் எடிசன் தான்.

ஓயாமல் வேலை செய்தான். நாளுக்கு 20 மணி உழைப்பு. வேலையில் ஆழ்ந்துவிட்டால் பொழுதும் தெரியாது. உணவும் உறக்கமும் வேண்டியிருக்காது. ஆரோக்கியமும் நீண்ட வாழ்வும் மூளையுடையஉழைப்பின் பயனே என்று கருதினன். தேகப்பயிற்சி செய்ததில்லை. 'உடல் எதுக்கு? என் மூளையை சுமக்கத் தானே' என்பான். உலகத்தின் சகல பாகங்களிலுமுள்ள ஸ்தாபனங்களிடமும் அவர்கள் கண்டு பிடிக்கும் புதிய இராசாயனப் பொருளை அனுப்பிவைக்கும்படி ஏற்பாடு செய்திருந்தான். அதோடு உலகத்தின் பல கோடிகளிலிருந்தும் ஹாஸ்யத் துணுக்குகளையும் சேகரித்து வைத்திருந்தான்.

இவன் தந்தி அச்சடிக்கும் யந்திரமொன்றை கண்டு பிடித்ததும் 'எவ்வளவு பணம் வேண்டும்? என்று கேட்டுக்கொண்டே வந்தான் ஒருவன். 3000 கேட்கலாமா, 4000 கேட்கலாமா என்று தயங்கிய எடிசனை '40,000 டாலர் தருகிறேன், போதுமா? என்று காசோலையையும் எழுதிக் கைக்குள் திணித்து விட்டான். பாங்கிலே கொண்டு போய்த் நீட்டியதும் குமாஸ்தா கையெழுத்

துப் போடும்படி திருப்பி நீட்டினன். காது செவிடாகையால் செல்லாத 'செக்'காக்கும் எனத் திரும்பி ஓடி வந்தான். அப்புறம் கையெழுத்துப் போட்டு 'பாங்கில்' கொடுத்தான். முழுப்பணத்தையும் 5, 10, டாலர் நோட்டுகளாகவே எண்ணிவிட்டான் குமாஸ்தா. அவற்றைக் கட்டிக் காக்க எடிசன் பட்ட அவஸ்தை! மறு நாள் அவனே பாங்கியில் வரவு செலவு வைக்கத் தொடங்கினன். இது இருபத்திரண்டாவது வயதில் நடந்தது.

பிற்காலத்தில் தன்தொழிற்சாலை யில் பல மணிக்கூடுகளை வைத்திருந் தான். ஒவ்வொன்றும் ஒவ்வொரு நேரம் காட்டும். மணிக்கூட்டைப் பார்த்த படியே வேலை செய்பவனைக் கண்டால் எடிசனுக்குப் பிடிக்காது.

நல்ல காரமான சுருட்டில் ஒரு நாளைக்கு இருபது புகைப்பான். அவன் கீழ் வேலை செய்பவர்கள் அவனுக்கு தெரியாமல் சுருட்டுகளை தாங்களும் உபயோகிப்பது உண்டு. அவர்களுக்கு ஒருபாடம் படிப்பிக்க எண்ணினன். தன் சுருட்டு வியா பாரியிடம் குதிரை மயிர், பசை ஆகிய வற்றை சேர்த்து சுருட்டுகள் செய் தனுப்பும்படி சொல்லி விட்டான். பலநாட்கள் கழித்து அவனிடம் தான் செய்யச்சொன்ன சுருட்டுக்களைப் பற்றி விசாரித்தான். மூன்று வாரங் களுக்கு முன்பே அனுப்பப்பட்டு விட் டதாக பதில் கிடைத்தது. நடந்த தென்ன தெரியுமோ? அவ்வேளையில் புதிய ஒரு ஆராய்ச்சியில் மூழ்கியிருந் தான் எடிசன். அந்த துர்நாற்றச் சுருட்டுக்களை மறதியாகத் தானே புகைத்துத் தீர்த்துவிட்டான்.

மேரி ஸ்ரில் வெல் என்பவளைக் கல்யாணம் பண்ணிச் சில நிமிஷங்க ளுக்குள் 'இதோ வருகிறேன்' என்று போனன். எதிலோ மெய்மறந்து ஈடுபட்டான். யாரோ ஞாபகப்படுத் தியதும் 'அடடா! சரிதான். இன்று தானே என்கல்யாணம்' என்றுசொல் லிக்கொண்டு எழுந்து வந்தான். குமரியுடன் 13 ஆண்டுகள் இன்ப வாழ்வு. மூன்று குழந்தைகளை மேரி பெற்றுக்கொடுத்தாள். கடைசியில் நெருப்புக் காய்ச்சலுக்கு இரையா ளள். எடிசன் துயரில் மூழ்கினன். வேலை ... வேலை ... வேலை யென்று துயர்நீக்கும் சாதனமாய் உழைப் பைக் கொண்டான். மினமில்லர் என்பவள் அவன் கருத்தைத் தொட் டாள். மறுமணம் செய்துகொண் டான். மேலும் மூன்று குழந்தைகள் பிறந்தன.

1,097 புதுமைகளைத் தன் பெய ரில் பதிவுசெய்த இந்த மேதாவிக்கு இறைவனிடம் அசையாத நம்பிக்கை யிருந்தது. 'இயற்கையின் போக்கைப் பல ஆண்டு உற்றுநோக்கிய எனக்கு பரிபூரண விவேகம், (மெய்யறிவு, மேதைகளுக்கெல்லாம் மேதை)ஒன்று மேலேயிருக்கிறது என்பதில் சந்தேக மில்லை. கடவுள் உண்டு என்பதை இரசாயனத்தின் மூலம் நிரூபிக்க லாமென எனக்குப் படுகிறது' என்று ஒரு தடவை சொல்லியிருக்கிருன்.

ஆனுல் கடவுளைப்பற்றிப் பேசும் போதும் ஹாஸ்யத்தை மறந்ததில்லை. ஒரு பாதிரியார் தன் கோயிலுக்கு மின் வாங்கிகள் (இடிவிழுங்கிகள்) பொருத்தவேண்டுமா என்று கேட்ட போது எடிசன், 'கட்டாயமாக ஏனென்ருல் கடவுளுக்கும் மறதி ஏற் படலாமல்லவா?" என்ருன்.

84 ஆண்டுகளாக அவன் மூளையை அவன் உடல் சுமந்தது. அவன் உடலை இந்த உலகம் சுமந் தது. ஒளியைத் தந்த "ஜோதி" அதன்பின் அணைந்துவிட்டது.

தொடர் கட்டுரை : 3.

# யாழ்நாட்டு இறந்த நகர்ச் செல்வங்கள்

சி. பொன்னம்பலம்

## வாணிபத் தொடர்புகொண்டு வந்துசேர்ந்த நாணகங்கள்.

வியாபாரத் தொடர்பினுல் கிரேக்கம், உரோமாபுரி, சீனம், அரபுமுதலிய நாடுகளில் வழங்கிய நாணகங்கள், தென்னிந்தியாவுக்கும் ஈழத்துக்கும் வந்துசேரலாயின. ஈழத்து வாசனைத் திரவியங்கள் இந்தநாடுகளுக்கு வியாபாரப்பண்டங்களாக மாறின. வணிகர்கள் வந்து குவிந்தனர். இவர்களுள் அராபியர் முக்கியமானவர்கள். இந்த வகையாக வந்த நாணகங்கள் கந்தரோடைக்கு எவ்வாறு வரலாம்? என்பது நியாயமான கேள்வி. ஏன்? கந்தரோடை யாழ்ப்பாணக் குடாநாட்டின் உட்பாகத்திலுள்ள இடம். இது கடற்கரையை அடுத்து இருக்கவில்லையாயினும் அக்காலத்தில் இராசதானியாக இருந்தபடியால் பிரதான வணிகர்கள் நகரத்தோடு தொடர்புபட்டே ஆகவேண்டும்; அதனுல் அவர்கள் நாணகங்கள் இராசதானியான இங்கு பரவிவிட்டன. அரபு நாணகங்களும் உரோம நாணகங்களும் கிரேக்க நாணகங்களும் கந்தரோடையில் அகப்படுகின்றன. வல்லிபுரத்திலும் நாகர் கோவிலிலும் கிடைக்கின்றன. மாதகல் கடலோரத்திலுள்ள சம்பல் துறையிலும் அதனை அடுத்துள்ள இராசமுருக்கடி என்ற இடத்திலும் அகப்படுகின்றன.

### சீன நாணகங்கள்

புராதன சீனநாணகங்கள் கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய இடங்களில் அகப்பட்டிருக்கின்றன. கந்தரோடையிலே எனக்கு முதலில் கிடைத்த சீனநாணகம் அகப்பட்டவரலாறேஒரு தனிச்சுவை. அதனுல் சீனநாணகத்தைப்பற்றித் தனிச் சிறப்புக் கொடுத்து எழுதவேண்டியிருக்கிறது.

சீனநாணகங்கள் வியாபாரத்தின் நிமித்தம் வந்ததாக நான் கருதவில்லை; பௌத்த மதத் தொடர்பு பண்டைக் காலத்தில் இலங்கைக்கும் சீனத்துக்கும் நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் இருந்து பல புத்தகுருமார் சீனத்திற்குப்போய்ப் பௌத்த சமய வளர்ச்சிக்காக உதவி புரிந்திருக்கின்றனர். அங்கிருந்தும் பல யாத்திரி

"நாணகம் என்ருல் நாண் சக அகம். அஃதாவது கயிற்றை உள்ளே இடுவது என்பது பொருள். புராதன காலத்தில் நடுவே துளையிட்ட நாணகங்களூடு கயிற்றை நுழைத்து அவற்றைக்

கர்கள் ஈழத்திற்கு வந்துபோயிருக்கின்றனர். பாஹியன் அவர்களுள் பிரசித்தமானவர்.

கந்தரோடை இராசதானியிலே பௌத்தசமயம் வளர்ந்திருந்தமை இங்கு காணப்படும் புத்தசிலைகள் — டாகபாக்களின் கூம்புகள் தக்க சான்றுகளாகும். சீன புத்த குருமார்கள் கந்தரோடைக்கும் வந்திருக்கலாம். அவர்கள் உபயோகித்த சீனக்காசுகள் இங்கு தங்கியிருக்க நியாயமுண்டு.

ஆண்டு 1945; ஒருநாள் பாடசாலை மாணவருடன் பழைய நகரமிருந்த மண்மேட்டைப் பார்வையிடப் போயிருந்தேன். அது சமயம் ஒரு மாணவர், ஐந்தாறு நாணகங்கள் கூட்டாக ஒரு செப்புக் கம்பியில் மாட்டப்பட்ட கோவையைக் கொண்டோடி வந்தார். மற்ற மாணவர்கள் இது சம்பவத்திலிருந்து என் அபிப்பிராயத்தை நோக்கிக் கூர்ந்து கவனித்துக்கொண்டு நின்றார்கள். அதனைப் பார்த்தபோது எனக்கும் அதிசயம் மேலிட்டது. அந்த மாணவர் அதனை எடுத்த இடத்தைப் போய்ப் பார்த்தோம். இன்னும் ஏதாவது இருக்குமா என்று சிறிதளவு அகழ்ந்து பார்த்தோம், வேறும் ஒரு பெரிய உருவினதான நாணகம் அகப்பட்டது. அவ்வளவுதான். இந்தச் சம்பவத்தோடு பாடசாலைக்குத் திரும்பிவிட்டோம். இந்த விந்தை வடிவ நாணகங்களைக் குறித்து பல வகைகளில், எந்த நாணக வர்க்கத்தைச் சார்ந்ததென அவற்றின்மீது பொறிக்கப்பட்ட எழுத்துக்களிலிருந்து ஊகித்துக்கொண்டேன். ஆனால் அந்த ஊகம் சரிதானா என்பதை அறியும் ஆவல் பதின்மூன்று ஆண்டுகளாக என்னுட் போராடிக்கொண்டிருந்தது, ஈற்றில் 1958-ம் ஆண்டு அகில உலக வாலிபர் விழாவிற்குச் சென்ற அன்பர், அந்த ஆவலையும், உண்மையாகவே புராபிக்கையையும் பூர்த்திசெய்தார். இந்தக் கட்டுரையின் முற்பகுதியில் பீக்கிங் மியூசியத்திலிருந்து வந்த கடிதம் அந்த வைபவத்தை விளக்குகிறது. கட்டுரை விளக்கத்திற்கு ஆதாரமாகக் காட்டிய நாணகங்களின் பிரதிமைகளில் கந்தரோடையில் எடுக்கப்பட்ட நாணகங்கள் சீன நாணகங்களாயிருக்கின்றன.

ஒன்று; சீன நாணகங்கள் நடுவே துளையுடையன. தமிழில் நாணகம் என்ற பதத்திற்கு பழைய சீன நாணகங்கள் நல்ல சான்றுகளாகின்றன. நாண் சக அகம், நாண்—கயிறு, அகம்—உள். அஃதாவது கயிற்றை உள்ளே இடுவது என்பது பொருள். புராதன காலத்திலே உள்ளே (நடுவே) துளையிட்ட நாணகங்களினூடே கயிற்றை நுழைத்து அவற்றைக் கோத்து அரையில் கட்டி உபயோகித்திருக்கிறார்கள். இந்தவழக்கம் சீனுவில் பழமையில் இருந்திருக்கிறது. நடுவே துளையிட்ட நாணகங்கள் சீனுவில் பதினேழாம் நூற்றாண்டு வரையும் உபயோகத்திலிருந்தன.

## புராதன மணிகள்

நாணகங்களிலும் பார்க்க மிகவுஞ் சுவையூட்டும் சேகரிப்பு புராதன மணிகள் என்று என் உணர்வில் படுகிறது. கந்தரோடையில் பல பல வகையான மணிகளும், பவளங்களும், மண்போளங்களும், தந்தத்திலான மணிகளும் காணப்படுகின்றன. இவ்வகையைச் சேர்ந்த மணிகள் (Beads) மாந்தோட்டத்திலும் (திருக்கேதீஸ்வரப் பகுதி) அநுரதபுரியிலும், பொல்லநறுவையிலும் காணப்படுகின்றன. மாதோட்டத்தில் எடுத்த மணிகளோடு, கந்தரோடையில் அகப்பட்ட மணிகள் பெரிதும் ஒற்றுமையுடையனவாக இருக்கின்

மணிகளை ஆக்குவதற்கு, பழிங்கு படிகம்போன்ற ஒளிப்பொருள்களும், சந்திர ஒளிக்கற்களும், வைரக்கற்களும் உபயோகப்பட்டிருக்கின்றன. யானைத்தந்தங்களிலும் கடைந்திருக்கிறார்கள், மணிகளுக்குச் சாணை பிடிப்பவர்களும், மெருகூட்டுபவர்களும் பழைய நகரில் வாழ்ந்திருக்கிறார்கள். மணிகளுக்கு உபயோகித்த வயிரக்கற்களின் குறைகள் சாணையில் அழுத்திய அடையாளங்களுடன் அகப்படுகின்றன. மணிகள் சில சேர்வைகளாலானவை. அந்தச் சேர்வைகள் உடனுக்குடன் உருவமாக்காது போனால் கல்லுப்போல வலுத்துக் கெட்டிபட்டுவிடும். அதன் மேல் அவை நீக்கப்பட வேண்டி வரும். இந்தவகையில் உபயோகமாகாத சேர்வைக்கற்கள் பல புராதன புதைபொருள்கள் உள்ள இடங்களில் கிடைக்கின்றன. மரத்தாற்செய்து தங்கமுலாம் பூசப்பெற்ற மணிகளும் இங்கு எடுக்கப்பட்டிருக்கின்றன. புராதனமாகவே சிலிக்கர் மண்ணிலிருந்து கண்ணாடி மணிகள் செய்யக் கூடியவர்களாக இந்தப் புராதன நகரத்தில் இருந்தார்கள் என்பதற்கு கண்ணாடி மணிகள் பல இங்கு காணப்படுகின்றன. இக்கண்ணாடி மணிகள் பழமைக்குத் தக்கவாறு தேய்ந்தும் உருக் குலைந்தும் இருக்கின்றன.

நன்கு அழுத்தமான திறமை புகுத்தப்பட்டுச் செய்யப்பட்ட மண் போளங்கள் ஏராளமாக கலவாமோடு நிறைந்த திடல்களிலே சேகரிக்கத்தக்கனவாயிருக்கின்றன. கடுகிலும் சிறிய மண் போளங்கட்கு எப்படித்தான் துவாரம் அமைத்தார்களோ என்று வியக்கத்தக்க முறையில் அமைந்திருக்கின்றன. இந்த மண் போளங்கள் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்து காலவெள்ளத்தின் வரலாற்றைத் தெரிவிக்கின்றன. வெறுமனே மண்ணில் அமைந்துவிட்டால் போதாதா? அதற்கு மஞ்சள், சிவப்பு ஒறேஞ்ச், பச்சை, வர்ணங்களும் ஊட்டப்பட்டு அழகுடன் விளங்குகின்றன.

படிகங்களிலே எத்தனை வகை வர்ணங்கள்? அவைகளிலிருந்து படிகமணிகளை, எட்டு, பதினறு, முப்பத்திரண்டு பட்டங்கள்கூட ஏற்படக்கூடிய வகையில் நுட்பமாக அமைத்திருக்கிறார்கள். இந்தப் படிகங்களிலிருந்து சுமார் ஒன்றரை இரண்டு அங்குலம் வரை உயர்ந்த புத்தர் உருவங்கள், சிங்கப் பிரதிமைகள் செய்திருந்தார்கள். என் இளம் பருவத்தில் இவ்வகையைச் சேர்ந்த புத்தபிரதிமைக்கு W. H. பிடெல் துரையவர்கள் அறுபது ரூபா கொடுத்து வாங்கியதைப் பார்த்திருக்கிறேன். தவிர சதுர வடிவம், முட்டை வடிவம், வட்ட வடிவான பழிங்குக் கற்களிலே அஜந்தா, சிகிரியா குகை ஓவியங்கள் போன்ற எழிலுருவங்கள் அமைக்கப்பெற்ற சிலவற்றையும் அவர் வாங்கியுள்ளார். யாழ்நாட்டு இந்தப் புராதனச் செல்வங்கள் கிராமத்தைவிட்டு கைகடந்து போனதே என்ற துயரம் இதனை எழுதும்போது ஏற்படாமலில்லை.

## புராதன மட்பாண்டக் குறைகளும், வர்ண அலங்காரங்களும்.

கந்தரோடையில் புராதன கட்டடங்கள் இருந்த இடங்களை நிர்ணயிப்பதற்குச் சான்ருக உள்ளவை, புராதனமான மட்பாண்டச் சிதைவுகளின் சிறிதும் பெரிதுமான துண்டங்கள்; இவை கணக்கற்ற வகையில் நிறைந்து கிடக்கின்றன. இந்தப் பகுதிகளில் கற்களிலும் பார்க்க கலவான் ஓடுகள்தாம் ஏராளம். செங்கற்றுண்டங்கள் அதற்குமேலே; இன்னும் கட்டடக் கூரைகளுக்கு உபயோகித்த, மூவிரல் பதித்து, தவிட்டு நிறத்தில் அமைந்த ஓடுகளின் பாகங்

ளும், தளத்திற்கும் சுவரிற்கும் வர்ணம் பூசிப் பதித்த பதிகற்களின் ...ங்களும் காணப்படுகின்றன.

மிக மிக அழுத்தம் வாய்ந்த ஒருவகைச் சாடியின் துண்டங்களை இங்குள்ள பாடசாலை மாணவர்கள் ''சிலேற்றிற்''குப் 'பென்சி'லாக உபயோகிக்கின்றனர். இந்தத் துண்டங்களில் அழகான அலங்காரம் பொறிக்கப்பட்டு வர்ணம் பூசப்பெற்றனவும் கிடைக்கின்றன. காலக்கழிவின் காரணமாக இவ்வகை ஓடுகளின் முழுவத்தையோ அரைப் பாகத்தை அல்லது அடிப் பாகத்தையோ ...ப்படியாகக் காணமுடியாது. சிரம...த்து ஆராய்ந்து இவ்வகைச் ...களின் அடிப்பாகத் துண்டும் ...ப்பாகத்தின் பெரிய துண்டொன்... என்வசம் இருக்கின்றன. இந்...ப் பழமைமிக்க பாத்திரத்தின் தன்...மயைக் கண்டு இவ்வகை மண்...ந்தரோடையில் இருப்பின், 'சிலேற்று' அல்லது 'பென்சில்' தொழிற்சாலையை ஏற்படுத்தலாம். இவை ...வ்வகை மண்ணில் இயன்றன என்...தை ஆராய்ந்து கொள்வதற்கு மண்...வுகூடத்திற்கு (மட்பாண்ட ஆராய்ச்சிச்சாலை) (CERAMIC ...ACTORY) வர்ணம் பூசப்பெற்ற ...டுத்துண்டங்கள், மேலே காட்டிய ...தனமான சாடிகளின் ஓடுகள், ...ற்றின் பல இனத் துண்டுகளைச் ...த்து ஒருபார்சலாக அனுப்பியிருந்...ன். அதனைப்பற்றி மட்பாண்ட ...ாய்ச்சி அதிகாரி சுந்தரவேலு ...ர்கள் அறிவித்த அறிக்கை இது...கும்.

நீர்கொழும்பு
29-10-47

## K. T. M. S. வித்தியாசாலை ஆசிரியர் அனுப்பிய புராதன மட்பாத்திரத் துண்டங்கள்.

மாதிரிக்கு அனுப்பிய மட்...ண்டத் துண்டங்கள் நல்லி...க்கைச் சேர்ந்த சிறந்த களிமன. பார்வைக்கு மிக்க அழகுடையன. மிகப் பழைய காலத்துக் குயவனது திரிகையில் வனையப்பட்டதாகக் காணப்படுகின்றன. இவைகளுட் சில மிக அழுத்தமும் மினுமினுப்பும் உடையனவாகக் காணப்படுகின்றன. இவைகள் சிவர்களிலிருந்து பெறப்பட்டனவாகலாம்; அல்லது சிவர்களுக்கு அலங்கரிக்கப்பட் டிருந்திருக்கலாம். இந்த மட்பாண்டங்கள் எக்காலத்தனவென்று திட்டமாகக் கூறவியலாது. ஒருபோது 1000 வருடங்களுக்கு முந்தியனவாகலாம்.

பார்வைக்காக.
**D. சுந்தரவேலு (ஒப்பம்)**
மட்பாண்ட ஆராய்ச்சியாளர்.

## பிற்காலத்து நாணகங்கள்

போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றியபோது பெரும் மாற்றங்களேற்பட்டன. தங்கள் ஆதிக்கத்தை முற்று முழுக்க நுழைப்பதற்காக, அதுவரை இருந்த கலாச்சாரங்கள் பண்பாடுகள் எல்லாவற்றிலுமே மாற்றங்கள் செய்யலாயினர். திடீர் மாற்றங்கள் விரைவாக ஏற்படலாயின. ஈழ நாட்டில் மக்கள் அநுசரணையில் இருந்த இந்து, புத்தமதங்களை வன்மையாகக் கண்டித்துக் கிறிஸ்து மதத்தைப் பரவ வைத்தனர். மத சம்பந்தமான இந்து புத்த மத ஆலயங்களைத் தகர்த்து ஒழித்தனர். பழம் பெரும் நகரங்களை அழித்துத் தமது கட்டட

னர். இந்த அழிவுகளுக்குக் கந்தரோடையும் தவறவில்லை. அங்கிருந்த கதிரகொடவிகாரை இருந்தஇடமுந் தெரியாது மண்மேடாயிற்று. பழைய கட்டடங்கள் அழிவுற்றன. சிலைகள் பலிபீடங்கள் தகர்த்தெறியப் பட்டன. உபயோகத்திலிருந்த நாணகங்கள் உபயோகமற்றுப் போயின. பழைய நாணகங்களின் அடையாளம் எதுவும் இன்றிப் புதிய வழியில் நாணகங்களை ஆக்கி வழங்கவைத்தனர். அவர்கள் நாணகங்களில் V. O. C. என்ற எழுத்துக்களும், ஆண்டும் ஒரு பக்கத்திலும், மறுபக்கத்தில் இரு சிங்கங்கள் தாங்கி நிற்கும் கேடயமும் பொறிக்கப்பட்டிருந்தன. நாணகங்கள் வட்டவடிவின. சில சில மாற்றங்களோடு பலவகை நாணகங்கள் வழங்கப்பட்டன. இவர்களைத் தொடர்ந்து ஒல்லாந்தரும் நாணகங்களை உபயோகித்தனர் இவர்கள் கால நாணகங்கள் தீவகம் எங்கணும் காணப்படுகின்றன. ஆங்கிலேயர் கைப்பற்றியபோது, முதலில் கிழக்கிந்திய வர்த்தகசங்கம் ஆட்சி புரிந்தது. அக்காலம் இங்கிலாந்தை ஆண்ட அரசர்களது தலையுடன் ஆண்டும் குறித்து தங்கள் வர்த்தகசங்கப் பெயரோடு வழங்கினர். பின்னர் தேசாதிபதிகளை அனுப்பி பிரித்தானிய சக்கராதிபத்தியம் அரசேற்றபோது, பிரித்தானிய சக்கரவர்த்திகளின் தலைகளைப் பொறித்து மறுபக்கத்தில் இலங்கையில்வழங்கிய புராதன நாணகங்களில் பொறித்திருந்த யானையின் உருவத்தை அமைத்து ஆண்டுகளையு குறித்து வழங்கிவந்தார்க பிற்பகுதியில் இலங்கையின் தான வருவாய்க்குரிய தாவ மாகிய தென்னையின் உருவமும் பொறிக்கப்பட்டது. பிற்காலத்து நாணகங்களைப்பற்றி பெரும்பாலும் தெரியப்படுத்த வேண்டிய அவசியம் இன்மையால் அது இவ்வளவில் தவிர்க்கப்படுகிறது.

யாழநாட்டிலே இறந் ரங்களான வல்லிபுரம், க ரோடை என்பவற்றின் வங்களைப் பற்றிச் சிறிதுசெ னேன். ஒரு பெரும் அரண் யின் முன் நிற்கும் வாசற்கார போன்றவன் நான். வாயி காப்பவன் அரண்மனையி இருக்கும் செல்வங்களுக்கு ஊற வராது கள்வர் நுழையா பாதுகாப்பதுதான் தனதுவே என்பது மாத்திரமே தெரி அரண்மனையில் எங்கெங்கே பொக்கிஷசாலைஉண்டு? பண்ட சாலையுண்டு, மன்னர்அணிக களின் பெறுமதி எவ்வள என்றெல்லாம் தெரிந்துகொ வராது. அவன் வாயில்கா நிற்பதால் உள்ளே அதற்கே ஏதோ பெறுமதி இருக்கி என்பதுதான் பிறரும் அ முடியும். இந்தக் கட்டுரையு அவ்வளவில்தான் பயன்பெ என்று கருதுகிறேன். அ நகர்ச் செல்வங்களைக் கொண்டு வரலாறுகளை நுணுகி ஆராய முயல்வது வரலாற்று ஆசிரியர்களது பெரும பணியாகும்.

(முற்றும்)

# "பெருமை மிகு கரி"

அ. க. சர்மா - B. Sc. (Lond.)

'கரி' என்ற தலையங்கத்தைப் பார்த்து மலைத்துவிட்டீர்களா? இருந்தாலும் ஆயிரம் பொன். இறந்தாலும் ஆயிரம் ...யான் எனக்கருதப்படும், கரியையானையையா? பிரணவ உருத்துவத்தையே பிரதிபலிக்கும், துங்கக் கரிமுகத்து விநா...ரையா? கொல்லன் ஊதுலை ...லை உபயோகிக்கும் கரியை...ா? தலையங்கத்திற்கு எடுத்துக் கொண்டீர்கள், எனக் கேட்கிறீர்களா? இருங்கள். மேலே பட்டாலே கரியாகிவிடும் என்று ...ந்து அலட்சியப்படுத்தப்படுவதும், வாழ்கைக்கே இன்றியமையாததுமான கரியே, நாம் ஆராயப்போவது. பொருளியலின்படி கரி என்று நாம் சாதாரணமாகக் குறிப்பது இங்காலம் ...ல்லது கரியம் ( CARBON ) ...ற்று கூறப்படவேண்டும்.

...உலக அமைப்பிலே எந்...பொருளையும் 'உதவாக்கரை' என்று ஒதுக்கிவிட முடியுமா? எதுவும், காரணகாரியத்தோடு இருந்து இயங்கும்படியிருப்பதுதான் இயற்கையின் நியதி. ஏன்! விதியுங் கூட, ஒளியும், இருளும், பொருளும், வெளியும், வெப்பமும் தட்பமும், ஈரமும் வரட்சியும் எல்லாமே சேர்ந்தாற்றான் உலகம் சமன்பட்டு இயங்கும். கரியையும், கருமையையும் அமங்கலமாகக் கருதுகிறார்கள். இது பல நாடுகளிலும் நிலவிவரும் ஒரு நம்பிக்கை. ஆனால் கரியின்பெருமை தெரிந்தால் நாம் பிரமித்து விடுவோம். அதன் ஒப்பற்ற சிறப்பு, அறிவியல் அறிஞர்களையும் மயக்கிவிடுகின்றது.

இவ்வுலகிலே அநேக தனிப்பொருள்கள் (92) இருக்கின்றன. அத்தனிப் பொருள்களிலே ஒன்றாகிய கரி தன்னிகரில்லாச் சிறப்புடையது. கரியில்லையேல் உலகத்தில் உபயோகமானதும், வாழ்க்கையில்

---

"வைரம் என்பது கரியின் ஒருருவம். பெண்களிடம் வைரந்திற்குப் பதிலாக கரியை உபயோகித்தாலென்ன? என்று நாம் புத்தி கூறினால், அவர்கள் எங்கள் அறிவிலே சந்தேகப்பட்டு, அங்கொடை வாசியாக்க முயன்று, நம் ...முகத்தில் கரியைப் பூசிவிடுவார்கள்."

இன்றியமையாததுமான பொருள்கள் பல இல்லாமல் வாழ்க்கையே நடந்தேற முடியாத வாறு ஆகிவிடும். உயிருள்ள பிராணிகளுக்கும், தாவரங்களுக்கும் அடிப்படை ஆதாரமாக நிற்பது கரியே.

கரியை ஒரு சாதாரணப் பொருள் என்று நாம் அலட்சியமாக நினைக்கின்றேமல்லவா? ஆனல் இதே கரிதான் பொருளியலிலே மிகவுஞ் சிக்கலையுண்டாக்கும் ஒரு தனிப்பொருள் என்று கூறினல் அது பலருக்கு வியப்பையுண்டாக்குவதா யிருக்கும். பொருளியலின்படி, கரி மட்டும் பிறப்பிக்கும் கூட்டுப் பொருள்கள், மற்றைய தனிப் பொருள்கள் எல்லாஞ் சேர்ந்து பிறப்பிக்கும் கூட்டுப் பொருள்களைவிடப் பன்மடங்கு அதிகமானவையென்றல், கரியின் பெருமையை ஒருவாறு புரிந்து கொள்ளலாம்.

"கரியின் அணுக்கள் பல ஒன்றேடொன்று தொடர்புள்ள சங்கிலிக் கோவைபோலப் பின்னிக்கொள்ளும் சக்தி வாய்ந்தவை;" என்ற தனிச்சிறப்பே, கரிக்கு இத்தகைய மகத்துவத்தையளிக்கின்றது.

இத்தகைய சிறப்பியல்பினுல், பல கூட்டுப் பொருள்கள் உண்டாவது மாத்திரமன்றிச் சிக்கலான மூலக்கூற்றமைப்புள்ளனவும், அதிக மூலக்கூற்று நிறையுள்ளனவுமான, பல பொருள்கள் உண்டாகின்றன. மற்றைய தனிப் பொருள்களுக்கு இத்தகைய சக்தி அதிகமாகக் கிடையாது. இது காரணத்தினுலே தான் கரி சம்பந்தப்பட்ட பொருள்கள், சேதனவிரசாயனம் (ORGANIC CHEMISTRY) என்ற தனிப்பெரும் பிரிவாகி ஆராய்ச்சிகள் பலவற்றிற்கடிகோலி தன்னிகரில்லாச் சிறப்புடன் விளங்குகின்றன.

தும்பைப் பூவைப்போல, வெள்ளை வெளேரென்றிருக்கும் சர்க்கரையும் (சீனியும்) வான வில்லைப்போல வர்ண ஜாலங்களையள்ளி வீசும்; புடவைகளுக்குப் போடும் பெரும்பான்மையான சாயங்களுக்கும், நறுமணங்களைக் கொடுக்கும் பல எண்ணெய்களும்; பல வேறுணவுப் பொருள்களிலே, சுவையையுண்டாக்கும் பலபொருள்களும், கண்ணைக் கவரும் வண்ணமலர்களுக்கு, அழகும் மணமும் கொடுப்பதும், பலவியாதிகளைப் போக்கிப் பயன்தரும் அநேக மருந்துவகைகளும், நாம் புசிக்கும், விதம் விதமான பொருள்களிலே உள்ளுறைந்து இருப்பதும் கரியின் கூட்டுப் பொருள்களே. நாம் தொடக்கூடக் கூசும் கரியை. அதுவே, வேறு பொருள்களிலே வேற்றுருக் கொண்டும் வருங்கால், நாமே விரும்பித் தேடிப் பெருமையுடன் பலன் பெறக் கையாண்டு களிக்கிறேமே! என்னே விந்தை!

அது மட்டுமா! நாம் உதாசீனப் படுத்தி மதிப்பிறந்து

கிடக்கும் இதேகரி தோற்ற மாற்றத்தின் மூலம் வைரமாகக் காட்சியளிக்கும் போது, குறிப்பாகப் பெண்களுக்கும், ஏன்; ஆண்களுக்கும் அதன்மீது உண்டாகும் மோகமும் அதனால் அதற்கு ஏற்படும் மதிப்பையும் சொல்லக்கூடுமோ; படித்த பெண்களுக்குக் கரியே வைரமென்று தெரிந்துங்கூட அந்த வைரத்தின் மீது அவர்களுக்கிருக்கும் அடங்கா ஆசையும், அவ்வாசையின் விளைவாக ஏற்படும் சர்ச்சையும் எவ்விதத்திலும் குறைவதாகத் தெரியவில்லையே. ஆண்களாகிய நாம் பெண்களுக்கு, வைரம் கரிதானே, வைரத்திற்குப் பதில் கரியை உபயோகிக்கக் கூடாதா? என்ன என்று பொருளியல் முறையிலே புத்திகூறமுற்பட்டால், அவர்கள் நம் அறிவிலே சந்தேகப்பட்டு, நம்மை வீட்டிலேயிருக்கத் தகுதியற்றவர்கள் எனத் தீர்மானித்து, அங்கொடை வாசியாக்கிவிட முயன்று நம்முகத்திற் கரியைப்பூசி விடுவார்கள். நம் கண்களையே நாம் நம்பக்கூடாது எனும் சித்தாந்தத்தை வலியுறுத்தத்தான் போலும் ஆண்டவன் தோற்ற பேதத்தின்மூலம் அற்பமான கரியை, அற்புதமான வைரமாக்கி வைத்துள்ளான்.

கரியின் ஒரு தோற்றவேறுபாடான வைரம். பூமியிலிருந்து வெட்டி யெடுக்கப் பட்டதும் ஒரு பொருள். வெட்டியெடுக்கையில் அது கூழாங்கல்லைப் போன்றிருக்கும். என்னே! இறை இதன் மூலம் "மின்னுவதெல்லாம் பொன்னல்ல, வெளுத்ததெல்லாம் பாலல்ல" என்பதை நாம் உணரவேண்டும். வைரத்தை வெட்டியெடுத்து, அதைப் பட்டைபோட்டு மெருகேற்றிய பின்னரே அதன் ஒளியும், காந்தியும் வெளித்தோன்றும். இலங்கையில், இரத்தினபுரியிலும், இந்தியாவில், கோல்கொண்டா, கிருஷ்ணா நதியின் சமீபம் ஆகிய இடங்களிலும், தென் அமெரிக்காவில் பிரேசில் என்னும் இடத்திலும் கிம்பர்லி என்னுமிடத்திலும் ஆஸ்திரேலியாவிலும், ஐக்கிய அமெரிக்காவிலும் வைரம் கிடைக்கின்றது.

வைரத்தைப்பற்றி நம்முன்னோர் நன்கறிந்திருந்தனர். உறுதிக்கு வைரத்தை உவமிக்கும் சந்தர்ப்பங்கள் சங்ககாலத்திற்கு முன்பே வழக்கிலிருந்திருக்கின்றன. வைரம் ஒளிக்கதிர்களைச் சிதறச்செய்து வர்ண ஜாலங்களைக்காட்டி எவரையும் மயங்கவைக்கும் இயல்புள்ளது. வைரத்தை வெட்ட வைரமே வேண்டும் என்ற உலகவழக்கிலிருந்து அதன் உறுதி தெள்ளிதிற் புலனாகின்றது. வைரம் சாதாரணமாக ஒரு திரவத்திலும் கரைவதில்லை. அது தீயகத்திற் சூடேற்றப்பட்டால் (800-900 பாகை) பற்றியெரிந்து கரியமிலவாயுவாக மாறி வைரம் கரியின் வடிவபேதம் என்பதைக் காட்டுகின்றது. விலைமதிப்பற்ற பகட்டான, கடினமான வைரம் விலையற்ற வாயுவாகின்றது. அது வாழ்க்

வாறு காட்டுகின்றது, பாருங்கள்.

கரியே வைரமாகத் தோற்ற பேதத்தினாலாகின்றதென்றால், கரியிலிருந்து வைரத்தை ஏன் செய்யக்கூடாது; என்ற ஐயப்பாடு உண்டாகின்றதல்லவா? கரியிலிருந்து வைரத்தைச் செய்ய "மோயிசான்" என்னும் பிரபல பிரஞ்சு விஞ்ஞானி பல பரிசோதனைகள் நடத்தி வெற்றிகண்டார். கரியின் பிறிது வகையானதும், எழுதுகரி எனப்படுவதும், இலங்கையிற் பெருமளவிற் காணப்படுவதுமான, கிராபைட் (GRAPHITE) டினால் செய்யப்பட்ட மூசையில், இரும்பையும், சர்க்கரையிலிருந்து தயாரித்த கரியையும், மின்னடுப்பில் சூடு செய்தார். இரும்பு உருகிக் கரியைக் கரைத்துக் கொண்டது. இரும்பு ஆவியாக மாறும் நிலையில் மூசையைத் தண்ணீருள் அமுக்கினார். இரும்பைப் பிறகு அமிலங்களிற் கரைக்க, பெருமளவில் எழுதுகரியாகவும், சிறிய அளவில் வைரமாகவும் கரி மாறியிருக்கக் கண்டார். இதுதான் முதன்முதலிற் செய்யப்பட்ட செயற்கை வைரம். இம்முறையிற் செய்யப்பட்ட வைரம் இயற்கை வைரத்தைப் போல மும்மடங்கு விலையாகின்றது. "மலையைக் கல்லி எலியைப் பிடிப்பது" போல இம்முறையினால் மிகவும் சொற்ப அளவு வைரமே கிடைக்கின்றது. இயற்கையிற் பெறப்படும் வைரத்தினூடு எக்ஸ்-கதிர்கள் (X-rays) ஊடுருவிச் செல்லும். ஆனால் போலிக்கு இவ்வியல்பு கிடையாது. இருப்பினும், மோயிசானின் இத்தகைய பரிசோதனை பொருளியற்றுறையிலே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

மரத்தின் அரைப்பங்கு நிறை கரியாலானது. பூமியினடியில் மரங்கள் மட்கி நிலக்கரியுண்டாகின்றது. இதில் சுமார் 80 சதவிகிதம் கரியிருக்கின்றது. இது தனிக்கரியாக இல்லை முக்கியமாக நீரகம் (HYDROGEN) என்ற வாயுவோடு இணைந்திருப்பதால், நிலக்கரியை வாலைகளிற் காய்ச்சி கற்பூரத்தைலம் எனப்படும் (Benzene) பூச்சியுருண்டை செய்யப்படும் நப்தலீன் (Napthalene) நெருப்புத் தண்ணீரெனப்படும் பீனோல் (Phenol) முதலிய உபயோகமான பொருள்களை எளிதிற்பிரிக்கமுடிகின்றது. கருமை நிறமுடையது நிலக்கரி. ஆனால் அதிலிருந்து பிரித்தெடுக்கப்படும் பல பொருள்களை நோக்கும்போது "உருவுகண்டெள்ளாமை வேண்டும்" என்ற உண்மை நினைவுக்கு வருகின்றதல்லவா? வாலையின் மேற்பகுதிகளிற்படியும் கரியைப்பெயர்த்து மின்செல்களில் வைக்கப்படும் கரிக்கட்டைகள் செய்யப்படுகின்றன. வாலையுள் எஞ்சி நிற்கும் கரிக்கட்டைகள் செய்யப்படுகின்றன. வாலையுள் எஞ்சி நிற்கும் கரி, கற்கரி (Coke) எனப்படும் தாதுப்பொருள்களிலிருந்து இரும்பு முதலிய

உலோகங்களைப் பிரிக்க இது பெரிதும் உதவுகின்றது.

குடிதண்ணீரை வடிகட்ட கரிப்படுக்கைகளை உபயோகிப்பது வழக்கம். அடுப்புக்கரி அழுக்குப்பொருள்களையும் சாயப் பொருள்களையும். நச்சுவாயுக் களையும் இழுத்து வைத்திருக்கும் இயல்பையுடையது. இரேடியோ வால்வுகளிலிருந்து இறுதியாக எஞ்சி நிற்கும் காற்றையகற்றவும் போர்க்களங்களிலே நச்சுவாயுக்களிலிருந்து தப்ப உதவும் முகமூடி முதலியவற்றைச் செய்யவும் கரி பயன்படுகின்றது. பெற்ரோல் கிடைக்காத காலத்தில், அடுப்புக்கரி மோட்டார்களின் உயிர்நாடியாயிருந்ததை யாரும் மறக்கமுடியாது.

இப்படி எண்ணற்ற பயன்களை விளைவிக்கும் பெருமை கரிக்குண்டு. கரியின் மகாத்மியத்தை எழுதிக்கொண்டே போனால் அனுமார் வால்மாதிரி நீண்டுகொண்டே போகும், இப்பொழுதே நீண்டுவிட்டது என ஆசிரியர் கூறப்போகிறார். எனவே கரியின் பெருமைப் புராணத்தை இத்துடன் முடிக்கிறேன்.


**ஜொலிக்கும் வைரங்கள்**

**அழகிற் சிறந்த ஆபரணங்கள்**

இவைகட்கு எம்மிடம் வாருங்கள்!

**நவநாகரிக டிசைன்களில்**

**நகைகள் குறித்த காலத்தில்**

**ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்**

**பிரகாசா ஆபரண மாளிகை,**

Prop: S. ஞானப்பிரகாசம்

83, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

அமுதப் பொங்கல்! ஆனந்தப் பொங்கல் ... ... அவளுக்கு அவன் தீட்டும் அன்பு மடல் ... ... ஆமாம்; அதன் போக்கே ஒரு அலாதி ... ...

# சித்தத்தே ஏற்றுக்கொள்

— திமிலைத்துமிலன் —

அன்புக்கு உரியாளே! கண்ணே! தேனே!
ஆரமுதே! தமிழ்ச் சுவையே! ஆசை அத்தான்
இன்பத்தேன் வார்த்து வைத்த மடலைக் காண
ஏங்குகின்றாய், என்னசெய, இந்தத் திங்கள்
முன்போல இல்லையடி! வேலைக் காக
முழுநாளும் ஓட்டளந்து மூச்சு வாங்கித்
தென்பிழந்த நிலையிலிதை எழுதுகின்றேன்.
தெரிந்துவிட்டாய் கோபித்தும் செய்வதென்ன!

பசும்பட்டைப் போர்த்துவிட்ட வயல்கள் தோறும்
பதுமத்தைக் குவித்தது போற் செந்நெற் காய்கள்;
விசும்பெல்லாம் மிதக்கின்ற தென்றல் மீது
மெருகூட்டி மிளிர்கின்ற முல்லை வாசம்,
கசங்காத கார்த்திகைப் பூ; பட்டிக் காட்டிற்
கைவண்ணம் காட்டிவிட்ட இயற்கை என்னை
வசமாக்கும் போதினிலும் உள்ளம் உன்தன்
வண்டுவிழிக் கேங்குமெனின் மற்றுமென்ன?

புதுப்பானை பொங்கவிடும் பொன்னாள் இன்று
புல்லரித்து நெல்விதைத்த உழவ னுள்ளம்,
குதிபாய்ந்து இன்பத்தைக் கொள்ளை கொண்டு
குதூகலிக்கும் பொங்கலிது! குறைகள் ஏது?
கதுப்பேறுங் கன்னத்துக் குமிழி தோன்றக்
கண்சிமிட்டும் கன்னியரைக் காணுந் தோறும்
வெதுப்பேறும் பிரிவென்னைக் கொல்வ தல்லால்
வேறென்ன இன்பமிங்கு? விசும்பல் ஒன்றே!

பொங்கலிது! புதுப்பொங்கல்! காத லுள்ளம்
பூரிக்கும் பொங்கலடி! எனக்கோ துன்பம்
தங்கியென திதயத்தை வெடிக்க வைத்துச்
சாவினிலே அமைதிதரும் பொங்க லிஃது
பங்கமற்ற நெஞ்சதனைக் கொள்ளை கொண்டு
பைத்தியமாய் ஆக்கிவிட்டுப் பார்த் திருக்கும்
மங்கையரில் நீயொருத்தி! இந்த எண்ணம்
மாய்த்துவிடும் என்னுயிரை. வசை உனக்கா?

ஆசிரியப் பயிற்சியிலே இரண்டு ஆண்டு.
அதற்குள்ளே எத்தனைதான் ஆட்டம் அங்கு?
'நீசர்களின் கூட்டத்தில் நீயும்' என்ற
நினைப்பொன்றே எனைத்தீய்க்கும் நிலைமை யிஃதைப்

பேசுவதா? போகட்டும் — பேதை உந்தன்
பிஞ்சுளத்தில் நஞ்சிட்டார் யாரோ? தூய
ஆசையிலே ஊறிவிட்ட காதல் மொட்டு
அரும்பிவரும் வேளையிலே அறுத்தல் நன்று?

நினைக்கையிலே நெஞ்செல்லாம் நீர்க் காடாகி
நீருகிப் புகையுதடி! நிமிர்ந்து பார்க்காய்!
உனக்கென்ன அவ்வளவு தீங் கிழைத்தேன்
உள்ளத்தைத் துகளாக்கி உடைப்பதற்கு?
எனக்கொருத்தி உளாளென்ற இன்ப முந்த
எவ்வளவு ஆசையொடு துள்ளி வந்தேன்...
மனக்கடலில் கொந்தளிப்பை மூட்டி விட்டாய்
வஞ்சனைக்குன் பிஞ்சுளத்தை மாற்றி விட்டாய்!

அன்புண்டு என்மேலே. ஆனல் உந்தன்
ஆங்கிலத்துக் கல்வியதற் கணை விதிப்பின்
என்காதல் பாசமென்ற இலக்கு நோக்கி
ஏகிடட்டும் என் அன்பே! இனிய தங்காய்!
உன்வாழ்வில் உனக்கேற்ற ஒருவன் வாய்க்க
உளமார வாழ்த்துகிறேன். உரிமை யாக
முன்போல மடல்வரைய வில்லையென்று
முனியாதே என்மீது. முழுதும் கேளு...

திங்களொன்று முடிந்ததடி பயிற்சி பெற்றுத்
திரும்பியதும் செல்லாத இடமே யில்லை
எங்கணுமே யில்லையென்ற சொல்லே யன்றி
இருக்குதப்பா வேலையென்ற இனிய வார்த்தை
தங்கியதே யில்லை வெறும் தமிழ் படித்துச்
சட்டம்பி யானதுவே தவறு? "என்ன
மங்கிடுமோ உங்கள் புகழ்? கூலியாக
மற்றவர்க்கு வழிகாட்டல் வசையோ" என்பாய்.

கூலிக்கு வேலைசெய்யக் கேட்டு விட்டால்
கூடாது என்கின்றார் கிராம மக்கள்
வேலிக்கு வேலிசென்றும் படித்த தாலே
வேலைதர மக்களுக்கு விருப்பமில்லை
கூழுக்கும் வழிகாணு நிலையில் சொந்தக்
குலத் தொழிலில் இறங்குதற்குக் கையில் ஏது?
நாளுக்கும் இதேநிலையே தமிழ் படித்தால்...
நான்மட்டும் விதிவிலக்கா? நல்ல வாழ்வு?

'அத்தான்' என் றெனையழைத்த அமுத வாயால்
'அண்ணு' என் றழைத்துவிடு அதுவே போதும்
செத்தாலும் மறக்கான் இவ் வேழை. உந்தன்
செங்காந்தள் மலர்கொண்டு தீட்டும் காதல்
முத்துக்கள் காண்பதற்கு ஆசை கண்ணே!
முடிக்கின்றேன் அத்தனையும் பாசம் என்று
சித்தத்தே ஏற்றுக்கொள் அன்புத் தங்காய்!
தித்திக்கும் என் ஆசை முத்தம் நூறு!

# பாற் கஞ்சி

*சி. வைத்தியலிங்கம்*

கலைச்செல்வி ஆண்டுமலரில் தன் எழுத்துலக அனுபவங்களைக் கூறியவர் திரு. சி. வை. கொழும்பு நகரசபைக் கந்தோரில் கடமையாற்றுகின்றார்: அந்த நாளைய சிறுகதை வளத்தை எடுத்துக் காட்டும் 'பாற்கஞ்சி' 17 - 12 - 39 'ஆனந்த விகடனில்' வெளியானது. அடுத்துவரும் இதழ்களில் வேறுபல எழுத்தாளர்களின் படைப்பைக் காணலாம்.

"ராமு, என் ராசாவன்னு, குடிச்சுடுவாய், எங்கே நான் கண்ணை மூடிக்கொள்கிறேன். குடிச்சுடு பாக்கலாம். நாளைக்குப் பாற் கஞ்சி..."

"சும்மாப் போம்மா, நாளிக்கு நாளிக்கென்னு எத்தினை நாளா ஏச்சு பிட்டாய். என்னதான் சொல்லேன். கூழ் குடிக்கவே மாட்டேம்மா."

"இன்னும் எத்தினை நாள் பஞ்சமடா? வயலிலே நெல் முத்தி விளைஞ்சு வருது. ஒனக்கு வேணும்னு பால் கஞ்சி தாரனே."

"கூழைப் பாத்தாலே வவுத்தைப் புரட்டுதம்மா. முடியாதுன்னு முடியாது." என்று சொல்லி அழத் தொடங்கினான்.

"அப்பா பசியோடே காத்துண்டிருப்பாரடா வயலிலே. கூழ் கொண்டு போகணும். என்ன பாடு பட்டும் நாளைக்குக் கஞ்சி தந்துடுறனே. ஆம் ...என் கண்ணேல்லியோ?"

"நிசமாய்ச் சொல்றயாம்மா? நாளைக்குப் பால் கஞ்சி தருவாயா?..."

சட்டென்று பக்கத்திலிருந்து சிறுவர்கள் தம்பளப் பூச்சி பிடித்து விளையாடும் சப்தம் கேட்டது. அவதி அவதியாய்ப் பத்து வாய் கூழ் குடித்தான் ராமு. எல்லாவற்றையும் மறந்து விளையாட ஓடினான்.

அந்தக் கிராமத்திலே முருகேசனுடைய வயல் துண்டு நன்றாய் விளையும் நிலங்களில் ஒன்று. அதற்குப் பக்கத்திலே குளம். குளத்தைச் சுற்றிப் பிரமாண்டமான மருத மரங்கள். தூரத்திலே அம்பிகையின் கோயிற் கோபுரம். இவை எல்லாவற்றையும் சுற்றி வேலி போட்டாற் போல் தூங்கிக் கிடந்தன குடி மனைகள்.

மார்கழி கழிந்து விட்டது. இப்பொழுது மேகத்திலே கார் ஓடுவதில்லை. ஞான அருள் பெற்ற நாஸ்திகன் மனம் போல வானம் தெளிவடைந்து தூய வெண்ணிறம் பெற்று வந்தது. ஆம், தை மாதம் பிறந்து துரிதமாய் நடந்து கொண்டிருந்தது.

மாரிக் காலம் முழுவதும் ஓய்ந்து தூங்கிக் கிடந்த ஜீவராசிகள் பாட்டுடன் வேலை தொடங்கி விட்டன. முருகேசனும் வயலிலே வேலை செய்து கொண்டிருந்தான். பனியிலே ஒடுங்கிக் கிடந்த நரம்புகளிலே சூர்ய ஒளி வெள்ளம் பாயவே, அவன்

தேகத்தில் ஒரு சுறுசுறுப்பு உண்டானது. வலித்து இறுகியிருந்த நரம்புகள் விண்போல் தெறித்தன. எழுந்து நின்று கண்களைச் சுழற்றித் தன் வயலைப் பார்த்தான். நெற்கதிர்கள் பால் வற்றி, பசுமையும் மஞ்சளும் கலந்து செங்காயாக மாறிக் கொண்டிருந்தன. இன்னும் பதினைந்து நாட்களில்...” என்று அவனை அறியாமல் அவன் வாய் முணுமுணுத்தது.

முருகேசன் மனதிலே ஒரு பூரிப்பு. ஓர் ஆறுதல். ஒரு மன அமைதி. அவன் ஒரு வருஷமாய்ப் பாடுபட்டது வீண்போகவில்லையல்லவா? ஆனால் இவற்றுக்கிடையில் காரணமில்லாமல் “சிலவேளை ... ... ஏதேனும் ... ... ... யார் கண்டார்கள்?” என்ற இன்பமும் துன்பமும் கலந்த ஒரு மன ஏக்கம்!

முருகேசனுக்கு வயலைவிட்டுப்போக மனம் வரவில்லை. பொழுது உச்சிக்கு வந்துவிட்டது. பசி வயிற்றைக்கிள்ளியது, என்றாலும் பயிருக்குள் நுழைந்து ஒவ்வொரு கதிராகத் தன் கைகளால் அளைந்து தன் குழந்தைகள் போலத் தழுவிக்கொண்டிருந்தான்.

கண்ணை மின்னிக்கொண்டிருந்த அந்த வெயிலிலே காமாட்சி கூழுடன் அப்பொழுதுதான் வந்தாள். கூழ் குடித்துக் கொண்டிருக்கும்பொழுது முருகேசன் அவளைப் பார்த்து, “போனவருசந்தான் மழை இல்லாமல் எல்லாம் சப்பையும் சாவியுமாய்ப் போயிடுத்து. காமு, அதோ பார், இந்தவருஷம் கடவுள் கண்திறந்திருக்கிறார். கருப்பன் செட்டி கடனைத் தீர்த்துப்போடலாம். நமக்கு ஒரு வருசத்துக்குச் சோத்துக்குக் குறைவு வராது. எங்க ராமனுக்கு ஒருசோடி காப்பு வாங்கணும்...”

“எனக்கு ஒட்டியாணம்.”

“ஏன், ஒரு கூறைச்சேலையும் நன்னாயிருக்குமே.”

“ஆமாங்க, எனக்குத்தான் கூறைச்சேலை. அப்படின்னா ஒங்களுக்கு ஒரு சரிகைபோட்ட தலப்பா வேணுமே.”

“அச்சா, திரும்பவும் புதுமாப்பிள்ளை பொம்புளையாட்டம் ரெண்டு பேரும்...ஒ...ஒரே சோக்குத்தான்” என்று சொல்லி அவளைப்பார்த்து இளித்தான்.

காமாட்சி வெட்கத்தினால் தன் சீலைத்தலைப்பால் முகத்தை அரைகுறையாய் மூடிக்கொணடு “அதெல்லாம் இருக்கட்டும். எப்போ அறுவடைக்கு நாள் வைக்கப்போறீங்க” என்றாள்.

“இன்னிக்குச் சனிக்கிழமை, சனியோடு சனி எட்டு, மற்றச்சனி பதினைந்து. ஆம், நல்ல நாள், அதே சனிக்கிழமை வைத்திடுவமே.”

“தாயே, இதுக்கிடையில் ஒரு விக்கினமும் வந்துடப்படாது” என்று மனதில் சொல்லிக் கொண்டாள் காமாட்சி.

ஒரு பெருநாளை எதிர்பார்ப்பது போல் காமாட்சியும் முருகேசனும் அறுவடை நாளை எதிர்நோக்கி இருந்தார்கள். காமாட்சி தன் வீட்டிலுள்ள களஞ்சிய அறையைக் கோலமிட்டு மெழுகி வைத்திருந்தாள். லக்ஷ்மி உறையப்போகும் அந்த அறைக்கு ஒவ்வொரு நாளும் தீபம் ஏற்றி வந்தாள். மணையாகக்கிடந்த அரிவாள்களைக் கொல்லன் பட்டடையிற் கொண்டுபோய்த் தேய்த்து வந்தான் முருகேசன். கதிர்ப்பாய்களை வெயிலிலே உலர்த்தி, பொத்தல்களைப் பனை ஓலைபோட்டு இழைத்து வைத்தான். ஐந்தாறு நாட்களுக்கு முன்னரே அயல்வீட்டுக் கந்தையனிடமும், கோவிந்தனிடமும். “அறுவடைக்கு வந்துட வேணும், அண்ணமாரே”

என்று பலமுறை சொல்லி வந்தான். இருவருடைய மனத்திலும் ஓர் ஆவல் துடித்து நின்று இவற்றை எல்லாம் செய்து வந்தது.

அறுவடை நாளுக்கு முதல் நாள். அன்று வெள்ளிக்கிழமை. பகல் தேய்ந்து மறைய இன்னும் மூன்று நாழிகைதான் இருந்தது. நிஷ்களங்கமாய் இருந்த வானத்திலே திடீரென்று ஒரு கருமுகிற்கூட்டம் கூடியது. வரவரக் கறுத்துத் தென்திசை இருண்டுவந்தது. அந்த மேகங்கள் ஒன்றுகூடி அவனுக்கெதிராகச் சதி செய்வதாக முருகேசன் நினைத்தான். அந்தக் கருவானம் போல் அவன் மனத்திலும் இருள் குடிகொண்டது. காமாட்சி அவள் மனதிற்குள் அம்பிகைக்கு நூறுவாளி தண்ணீரில் அபிஷேகஞ் செய்வதாகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் ஒரு காற்று அடித்தது. கூடியிருந்த முகிற்கூட்டம் கலைந்து சிறிது சிறிதாய் வானம் வெளுத்துக் கொண்டுவரவே, முன்போல் ஆகாயம் வெளிவுடன் விளங்கிற்று. தன்னுடைய பிரார்த்தனை அம்பிகைக்குக் கேட்டுவிட்டதென்று காமாட்சி நினைத்தாள்.

முருகேசன் படுக்கப்போகுமுன், அன்றைக்குப் பத்தாவது முறை கந்தையனுக்கும் கோவிந்தனுக்கும் காலையில் அறுவடையைப்பற்றி நினைப்பூட்டிவிட்டு வந்து படுத்துக்கொண்டான். அவன் நித்திரைக்குப் போனபொழுது நேரமாகிவிட்டது. அவன் படுக்கையிலே புரண்டுகொண்டிருந்தான். நித்திரை அவனுக்கு எப்படி வரும்? அவனுடைய மனம் விழிப்பிற்கும் தூக்கத்திற்கும் இடையிலே ஊசலாடிக்கொண்டிருந்தது. ஆயிரஞ் சிந்தனைகள் பிசாசுகளைப்போல் வந்து அவன் மனதிலே ஓடிக்கொண்டிருந்தன.

அவன் வயலிலே நெல் அறுத்துக்கொண்டு நிற்கிறான். பக்கத்திலே கோவிந்தனும் கந்தையனும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் இவர்கள் அறுத்து வைத்ததைக் காமாட்சியும் பொன்னியும் சின்னம்மாவும் கட்டுக்கட்டாய் அடுக்கிக்கொண்டிருக்கிறார்கள். கிளிகளையும் காக்கைகளையும் துரத்திக்கொண்டு திரிகிறான் ராமு. அப்பொழுது காமாட்சி, "பள்ளத்துப் பள்ளன் எங்கேடி போயிட்டான்?" என்று பள்ளுப் பாடத் தொடங்கினாள்.

அதற்குப் பொன்னி, "பள்ளன், பள்ளம் பார்த்துப் பயிர் செய்யப் போயிட்டான்!" என்று சொல்ல, காமு, "கொத்துங் கொண்டு கொடுவாளுங் கொண்டு..." என்று இரண்டாம் அடியைத் தொடக்கினாள்.

அதற்குப் பொன்னி, 'கோழி கூவலும் மண்வெட்டி கொண்டு' என்று சொல்ல, இருவரும் சேர்ந்து, "பள்ளன், பள்ளம் பார்த்துப் பயிர் செய்யப் போயிட்டான்!" என்று முடித்தார்கள்.

உடனே காமு, "ஆளுங் கூழை. அரிவாளுங் கூழை!" என்று சொன்னதும், முருகேசன் "யாரடி கூழை?" என்று அரைத் தூக்கத்திலிருந்து கத்திக்கொண்டு எழுந்திருந்தான்.

முருகேசன் — ஆள் கூழை. பாவம், தன்னையே அவள் கேலி செய்வதாக நினைத்து அப்படிக் கோபித்தான். இப்பொழுது நித்திரை வெறிமுறிந்ததும், தான் செய்ததை நினைக்க அவனுக்கு வெட்கமாயிருந்தது. தனக்குள்ளே சிரித்துக்கொண்டு திரும்பவும் படுத்துக் கொண்டான். அந்தக் கனவுதான் எவ்வளவு அழகான கனவு! அதன் மீதியையும் காண வேண்டுமென்று அவனுக்கு ஆவலாயிருந்தது. ஆனால் நித்திரை எப்படி வரப் போகிறது? கனவுதான் மீண்டும் காணப் போகிறானா? தன் கற்பனையிலே மீதியைச் சிருஷ்டித்துப் பார்த்து அவன் மகிழ்ந்து கொண்டிருந்தான்.

பாட்டுடன் அறுவடை சென்று கொண்டிருக்கிறது. வயலிலே நின்று நெல் மூட்டைகளை வண்டியிலே போடுகிறான். வண்டி வீட்டு வாசலிலே வந்து நிற்கிறது. அவனுடைய களஞ்சியம் நிறைந்து பரிபூரணமாய் விட்டது. ராமன் வயிறு நிறையப் பாற்கஞ்சி குடித்துக்கொண்டிருக்கிறான். காமு ஒட்டியாணத்துடன் வந்து அவனை......

அப்பொழுது வீட்டுக் கூரைக்கு மேலேயிருந்து ஒரு சேவல் கூவிற்று. முருகேசனுடைய கற்பனை அறுந்து விட்டது. அக் கிராமத்தி லுள்ள சேவல்கள் தொடர்ந்து ஒவ்வொன்றாய்க்கூவிக்கொண்டுவந்தன. அவன் வீட்டுக்கு முன்னால் கட்டியிருந்த ஆட்டுக்குட்டி, "மேய், மேய்" என்று கத்தத் தொடங்கியது. எங்கிருந்தோ கள்ளத்தனமாய் உள்ளே நுழைந்த மெல்லிய காற்று அவன்மேல் படவே, மேனி குளிர்ந்தது. முருகேசன் பரபர வென்று எழுந்திருந்தான். வாசலை அடைந்து வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

அவன் படுக்கைக்குப் போன பொழுது வானத்திலே பூத்திருந்த நக்ஷத்திரங்கள் ஒன்றையும் காண வில்லை, வானம் கறுத்துக் கனத்து எதிலோ தொங்கிக்கொண்டிருப்பது போல் தோன்றிற்று: வீட்டு முற்றத்திலே வந்து நின்றான். ஒரு மழைத் துளி அவன் தலைமேல் விழுந்தது. கையை நீட்டினான். இன்னும் ஒரு துளி! மற்றக்கையையும் நீட்டினான். இரு துளிகள் வீழ்ந்தன! அவன் தலையிலே வானமே இடிந்து விழும் போல் இருந்தது.

உக்கிப்போய்த் தன் வீட்டுத் திண்ணையிலே அவன் குந்திக்கொண்டான். பொலு பொலவென்று மழை தொடங்கியது. இடி இடித்து மின்னி மழை சோனாவாரியாய்க் கொட்டிக் கொண்டிருந்தது.

காலை ஏழு மணியாகியும் மழை விடவில்லை. ராமன் ஓடிவந்து தந்தைக்குப் பக்கத்திலே குளிர் காய்ந்து கொண்டிருந்தான். காமாட்சி இடிந்து போய் நின்றாள். மழையுடன் காற்றும் கலந்து "ஹோ"வென்று இரைந்து கொண்டிருந்தது.

"அம்மா, இன்னிக்குப் பால் கஞ்சி தாரதாய்ச் சொன்னியே, பொய்யாம்மா சொன்னாய்?" என்று தாயைப் பார்த்துக் கேட்டான் ராமு.

காமாட்சிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவள் வயிறு பற்றி எரிந்தது. பச்சைக் குழந்தையை எத்தனை நாட்களாய் ஏமாற்றி விட்டாள்? மழையையும் பாராமல் பக்கத்து வீட்டிற்கு ஓடினாள். கால்படி அரிசி கடனாய் வாங்கிக்கொண்டு வந்தாள்.

முருகேசன் ஒன்றும் பேசாமல் வானத்தைப் பார்த்தபடி இருந்தான். அவனுடைய பார்வை வயல் வெளியை ஊடுருவிச் சென்று எங்கேயோ லயித்துப் போய் இருந்தது.

"வெள்ள வாய்க்காலிலே தண்ணீர் கரை புரண்டோடிக்கொண்டிருக்கிறது. இப்பொழுது குளம் நிறைந்து தண்ணீர் பெருக்கெடுத்துவிடும். என்னுடைய நெற்பயிர்கள் கீழே வீழ்ந்து உருக்குலைந்து விட்டன. நெற்கதிர்கள் உதிர்ந்து வெள்ளத்துடன் அள்ளுண்டுபோய்க் கொண்டிருக்கின்றன......" என்று அவன் எண்ணி ஏங்கினான்.

காமாட்சி களஞ்சிய அறைக்குப் போனாள். அது வெறுமனே கிடந்தது. அதைப் பார்த்ததும் அவளுக்கு அழுகை விம்மிக்கொண்டு வந்தது. அங்கே நிற்கத் தாங்காமல் வெளியே வந்தாள். ராமு, "நாளைக்குத் தரயாம்மா பாற்கஞ்சி" என்று கெஞ்சிக் கேட்டான். அவன் கஞ்சி குடித்த கோப்பை அவளுக்கு முன்னே காலியாகக் கிடந்தது.

அநேக நாள் பழக்கத்தினாலே "நாளைக்.........." என்று மட்டுமே அவள் சொன்னாள். அவ்வளவுதான் அவளால் சொல்ல முடிந்தது. அந்த அரைகுறையான வார்த்தை முருகேசன் வயிற்றிலே நெருப்பை அள்ளிக் கொட்டியது.

கேள்விகளை அஞ்சலட்டையில் எழுதி, முகவரியை வெட்டி ஒட்டி அனுப்புங்கள். தபாலுறையுள் வரும் கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. மிகச் சிறந்த கேள்விக்கு இரண்டுரூபா பரிசு உண்டு.

# "பட்! பட்!!"

— தாண்டவக்கோன் —

ச. அனந்தன், சுதுமலை

கே: தமிழ்வாணனின் உண்மைப் பெயர் என்ன?

ப: இராமநாதன்.

கே: கேள்வி – பதில் சொல்பவர்கள் தங்கள் சொந்தப் பெயரையோ அல்லது உருவப்படத்தையோ வெளியிட வேண்டும். அப்படி இல்லாவிடில் ஏதோ ஐந்தோ ஆறோ பேர் சேர்ந்து பதில் சொல்லுகின்றனர் என்று சந்தேகப்படலாமல்லவா?

ப: தராளமாக. சந்தேகப்படுவதற்குக்கூட ஒருவனுக்கு உரிமை இல்லையென்றால், இம் மனிதப்பிறவியும் வேண்டுவதோ இம்மானிலத்தே!

ச. விபூஷணன், அளவெட்டி

கே: இலங்கையில் அதிகம் படித்துப் பட்டம்பெற்ற கல்விமானின் பெயர் என்ன?

ப: வண. பீட்டர்பிள்ளை என்ற தமிழர்.

இ. சந்திரன், கல்முனை

கே: குயுக்தியார், தாண்டவக்கோன் காளமேகம், மேகநாதன் ஆகியோரின் திறமை பற்றி வாசகர்களிடையே வாக்கெடுப்பு நடத்தினால் யார் வெற்றிபெறுவார்?

ப: அதிக வாக்குகளைப்பெறுபவர்!

க. சுகுணதேவி, அக்கரைப்பற்று

கே: வாழ்வதற்கு இன்றியமையாதது எது?

ப: உயிர்.

ஆ. சுந்தரவதனம், பேராதனை

கே: மனிதர்களுக்கு ஏன் இரண்டு காதுகளும் ஒரு வாயும் இருக்கின்றன?

ப: ஒருமடங்கு பேசினால், இரண்டு மடங்கு கேட்க வேண்டும் என்பதை அறிவுறுத்துவதற்காக.

எஸ். மைதிலி, மைலாப்பூர்

கே: சிறந்த எழுத்தாளர்கள் உபயோகிப்பது எந்த மை?

ப: பொறுமை. திறமை, வறுமை, ஆதியன சேர்ந்த ஒரு புது'மை'

செ. காந்திமதி, பதுளை

கே: இலங்கை அரசாங்கத்தின் நடுநிலைமைக் கொள்கைக்கு ஓர் உதாரணம் கூறுங்கள்?

ப: இந்திய மண்ணையே பார்த்தறியாத பலரை இங்குமில்லாமல்

அங்குமில்லாமல் நடுவிலே நிலைக்க வைத்துள்ளதே!

த. புவனேஸ்வரி, யாழ்ப்பாணம்

கே: 'கலைச்செல்வி' ஆண்டுமலர் வெளியீட்டின்மூலம் பலரினதும் பாராட்டைப்பெற்று இதயம் பூரித்திருக்கும் தாங்கள், நிறையில் முன்பிலும் பார்க்க எத்தனை பவுண்டு அதி...ருக்கின்றீர்கள்?

ப: நிறையில் அடியிருக்கின்றேனா? ஈட்டிய புகழை எவ்வாறு தொடர்ந்து நிலைநாட்டுவது என்ற கவலையில் நாளொரு பவுண்டும் பொழுதொரு அவுன்சுமாகக் குறைந்துகொண்டல்லவா போகின்றேன்!

சி. கணேசவேல், கந்தரோடை

கே: எழுத்தறிவித்தவன் இறைவனாவான். எழுத்தறிவித்தவள்?

ப: இறைச்சியாவாள்!

வ. கந்தசாமி, வட்டுக்கோட்டை

கே: இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட மூவர்க்கு தென் இந்தியாவில் இப்போது மிகுந்த செல்வாக்குண்டு. அவர்கள் யார்?

ப: புரட்சி நடிகர் எம், ஜீ. ராமச்சந்திரன், ஹாஸ்ய நடிகர் சந்திரபாபு, இலங்கை வானொலி மயில்வாகனன்.

மா. கிருஷ்ணமூர்த்தி, வெள்ளவத்தை

கே; என் நண்பன் வெளியூர் சென்றுள்ளான்' அவனுடைய மனைவியை என் வீட்டில் சில நாட்களுக்கு வைத்துப் பாதுகாக்க வேண்டும். நான் கல்யாணமாகாதவன், என் நிலைமை தருமசங்கடமாயிருக்கின்றதே!

ப: முதலில் வள்ளுவர் சொன்ன 'பேராண்மை'யை வரவழைத்துக் கொள்ளுங்கள். பின், "அகலாது அணுகாது தீய்க்காய்வார் போல்க."

பாலு, செட்டிகுளம்

கே: தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் இப்போது அடிக்கடி எழுதி வரும் ஜ. சாமிநாதன் அவர்களைப் பற்றித் தங்களுக்கு ஏதாவது தெரியுமா?

ப: "நொண்டிக்குழந்தை" என்ற தலைப்பில் ஓர் ஏழைக் கிறிஸ்தவக் குடும்பத்தை மையமாக வைத்துக் கதையெழுதி, கல்கி – மேமாதச் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றவர் ஜ. சா. அவர்கள், கலைமகள், கல்கி, தாமரை — ஆகியவற்றில் அடிக்கடி எழுதிவருகின்றார். கலைமகள் கி. வா. ஜ. அவர்களின் மகன்,

சாந்தி சங்கரன், நுககொடை

கே; சிறுகதை, குறுநாவல், நாவல்— இவற்றின் வித்தியாசங்கள் என்ன?

ப: ஒரே இதழிலேயே முடியும் கதை, சிறுகதை; இரண்டாவது இதழையும் எட்டிப்பார்த்தால் அது குறுநாவல்; மூன்று இதழ்களுக்குமேல் விரிந்தால் அது நாவல்!

கே: நான் ஒரு சிறுகதை எழுதியுள்ளேன். ஆனால் நன்றாக அமையவில்லை. என்ன செய்யலாம்?

ப: நன்றாக எழுத முயலுங்கள். முடியாவிட்டால் "சோதனைக் கதை" என்று குறிப்பிட்டு ஏதாவது பத்திரிகைக்கு அனுப்பிவையுங்கள்!

வை. ஆறுமுகம், அச்சுவேலி

கே: எங்கள் வாசிகசாலைக்கு நிரந்தரக்கட்டடம் எழுப்புவதற்கு எவ்வாறு நிதி திரட்டலாம்?

ப: ஒரு சங்கீதக்கச்சேரி வையுங்கள். காசு சேராவிட்டாலும் கற்கள் வந்துசேருமே!

தமிழ்நேசன், பம்பலப்பிட்டி

கே: சமீபத்தில் இலங்கைக்கு வந்த எழுத்தாளர் ஸ்ரீதர் அவர்களை

ஏன் இங்குள்ள எழுத்தாளர்கள் கௌரவிக்கவில்லை?

ப; 'கல்யாணப்பரிசு' படத்தின் வெற்றிக்கு மூலகாரணமாயிருந்தவர் ஸ்ரீதர். ஆனால் அவர் செய்த தவறு நடிக, நடிகையர்களுடன் சேர்ந்து இங்கு வந்ததுதான். சாதாரண மக்களுக்கு, தமக்குப் பிடித்த நடிக, நடிகையர்களைக் காணவேண்டுமேயென்ற ஆவல் அதிகமிருக்கும். ஆகவேதான் "ஸ்ரீதர் வந்தார், போனார்" என்பதுடன் அவரைப்பற்றிய பேச்சு நின்றுவிட்டது. இலக்கியக் கழகங்கள், அல்லது எழுத்தாளர் சங்கங்கள் முதலியவற்றின் அழைப்பின்பேரிற் இங்கு வந்திருந்தாரானால் எழுத்தாளர்கள்மட்டுமல்ல, பொதுமக்களே, நிச்சயமாகக் கௌரவித்திருப்பார்கள். சினிமா உலக எழுத்தாளர்கள் இதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்!

ஆனந்தன், அரியாலை

கே: இலங்கையின் மிகச் சிறந்த தமிழ்ப்பேச்சாளர் யார்? இந்தியாவில் யார்?

ப. அவரவர் 'ருசி'யைப்பொறுத்தது. எனக்குப் பிடித்த இலங்கைப் பேச்சாளர்கள்: க. ந. வேலன், பொன். முத்துக்குமாரன், இந்தியப் பேச்சாளர்கள்: கி. வா. ஜகந்நாதன், சி. என் அண்ணாதுரை.

சிங்கம், சாவகச்சேரி

கே; 'தினகரனில்' பஞ்சசீலக்குறள் எழுதிய 'பிக்பொக்கற்' யார் தெரியுமா?

ப, சொக்கன்.


**தாண்டவக்கோன்,**
மே - பா கலைச்செல்வி
சுன்னாகம்
இலங்கை.




# நல்லதீர்ப்பு

ஸ்ரீ புரடெக்ஷன்ஸ்.

தமிழ்த் திரையில் புரட்சி செய்த "அந்தநாளுக்கு" அடுத்ததாக வெளிவந்திருக்கிறது **நல்ல தீர்ப்பு.** துப்பறியும் படத்துக்கு ஏற்ற கதைதான். ஆனால் படமாக்கப்பட்டிருக்கும் விதம் — தமிழ்நாட்டு சூழ் நிலைக்கு அப்பாற்பட்டது.

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு, கொலைக் குற்றத்திற்காக ஆயுள்தண்டனை விதிக்கப் பெற்று அனுபவித்து வரும் தந்தையின் குற்றமற்ற தன்மையை உணர்ந்த தனயன், உண்மைக் குற்றவாளியைக் காட்டிக் கொடுத்து, பெற்றவனை மீட்கிறான்.

கதைக்கு வசனம் எழுதியவர் இன்னும் அதிக சிரத்தை எடுத்திருக்கவேண்டும். குடும்பக் கதையா, என்ன. சுவை மாறுபடுகிறதே. ஜெமினி கணேசன் ஆரம்ப முதல் முடிவு வரை வந்து போகிறார். இயற்கையான நடிப்பு. கத்தியால் குத்தமுனையும் சந்தர்ப்பத்தில் முகபாவங்களையும், உணர்ச்சிகளையும் கச்சிதமாக வெளியிடுகிறார். ஜமுனாவுக்கும் நாகையாவுக்கும் சந்தர்ப்பங்கள் போதாது. சாதாரணமாக நடமாட வைத்து விட்டார்கள். சகஸ்ரநாமம் பிராஸிகியூட்டரேதான். நீதிமன்றக் காட்சிகளில் அவர் திறமை வெளியாகிறது. 'கலாபாணி'யில் இதே பாத்திரத்தில் தோன்றிய 'கிஷோர்சாகு'வுடன் ஒப்பிடலாம். ஹாஸ்யத்துக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகள் இனிக்காமல் இல்லை. மாமனாரும் மருமகனும் தேவலையே. மாமனாரைக் குற்றவாளியென அவருக்கே நிருபித்துக்காட்டி, பொலிஸில் பிடித்துக் கொடுக்கும் காட்சிகள் நகைச்சுவை ததும்பி வழிகிறது. கண்ணாம்பா வழக்கம்போல அழுகிறார். ராஜத்தின் குலுக்கலுக்கு என்ன பெயரோ!

ஒளிப்பதிவும் எடிடிங்கும் பிரமாதம் என்று சொல்லும் அளவுக்கு இருக்கிறது. புதுமை செய்பவர்களை வரவேற்கத்தான் வேண்டும்.

— சதா.

# காத்தவராயன்

R. R. பிக்சர்ஸ்.

ஆர்யமாலாவின் அடுத்த அவதாரம் காத்தவராயன். பழையதையே போற்றுவது மனித இயல்பாதலால் ஒப்பிடுவது தவருக முடிந்தாலும் முடிந்துவிடும்.

புராணக் கதையா? என்று கேட்டுவிட்டு ஒதுங்கிவிடுபவர்கள் கூடத் தைரியமாகப் பார்க்கலாம். படத்தின் பெரும்பகுதி நகைச் சுவையாக இருப்பதால் ஆரம்பத்தில் நின்று இடைவேளைக்குப் பிறகுதான் ஓடுகிறது படம். சாம்சன் அண்ட் டிலைலாவைப் போன்ற பிரமாண்டமாகச் செய்ய நன்கு முயன்றிருக்கிருர்கள். பாட்டா, நடனமா, தெம்மாங்கா, உயர் தொனி வசனங்களா...எல்லாமே புகுத்தியிருக்கிருர்கள். இவைகளில் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டதாலோ என்னவோ கதையின் தத்துவமே பாழ்!

தயாரிப்பாளரின் பழைய சரக்குகளின் மணம் பல இடங்களில் வீசத்தான் செய்கிறது. ராமண்ணுவின் திறமை நகைச் சுவைக் கட்டங்களில் மிளிருகிறது.

சிவாஜிக்கு அடுத்ததாக நடிப்பில் கண்ணும்பாவைக் குறிப்பிடவேண்டும். கொடுக்கப்பட்ட பாத்திரத்தின் தன்மை பாலையாவைக் கெடுத்து விடவில்லையோ?

ஹாஸ்யக் காட்சிகளில் சில வந்துபோனவைதான். ஆனுல் நிரம்ப சுவையிருக்கிறது. காத்தவராயன் ஊரைக் கொளுத்த முற்படும்போது அவரின் உணர்ச்சியுடனும் ஆவேசத்துடனும் முக ஒப்பனை ஒத்துழைக்கவில்லை' சிலையை உடைக்கும்போது மனோகரா நினைவு ஏற்பட்டாலும் நிறைவும் ஏற்படுகிறது.

பாட்டுக்கள் நன்ருக இருக்கின்றன. ஒளிப்பதிவு சுமார். இசையமைப்பு தரமாக இருக்கிறது. காட்சி அமைப்புத்தான் யாவற்றையும் மிஞ்சுகிறது.

மூன்றரை மணி நேரமென்ருலும் அசையாமல் பார்க்கமுடிகிறது.

—ஆனந்தன்.

# சிந்தனைப் பொங்கல் ஒன்று

**.வித்துவான் க. ந. வேலன்**

பேசுவது எழுதுவது இரண்டுக்கும் அடிப்படை சிந்தனை. நல்ல பேச்சு, நல்ல எழுத்து என்று தேடிப்பார்த்தால் இந்த உண்மை தெளியவரும். எதையாவது பேசுவதும் எதையாவது எழுதுவதும் எனக்கு ஒத்துவராதவை.

இந்தக் காலத்துப் பத்திரிகையுலகத் தமிழால் தமிழ்ப் பற்றுக்கொண்டு தமிழைப் போற்றுவோர், தமிழ் அறிந்தோர் பலர். என்மட்டில் என் தந்தையால் வீட்டு வழிபாட்டுத் தேவார திருவாசகங்களில் பிறந்த தமிழ், சங்கம் சென்று காவியங் கலந்து, கலியாண சுந்தரர், மறைமலை படிந்து இன்றைய தமிழோடு கலந்தது. ஆதலால் நான் ஓர் உண்மையைச் சொல்லியாக வேண்டும். (அதற்கு ஏன் இவ்வளவு தயக்கம்? தாராளமாகச் சொல்லலாம் என்கிறீர்களா? இந்த உலகத்தில் உண்மை சொல்வதற்குத் தயங்குவது போல எதற்கும் தயங்க வேண்டியதில்லை. அவ்வளவு வரவேற்பு அதற்கு!) எளிமை என்பதற்கு வழவழா என்பது பொருளல்ல என்பதுதான் உண்மை. அவர் மிக எளிமையானவர் என்றால் அவர் கோவண ஆடையர்; கொடுத்ததைத் தின்பார்; பாயும் வேண்டாம் படுக்க. ஆகா எவ்வளவு எளிமை! பலருடைய பேச்சும் எழுத்தும் இப்படித்தான். எளிமை என்பது வெறுமை என்றாகிவிட்டது. ஒருகாலத்தில் கடுமை என்பது புரியாமை என்ற பொருளில் வழங்கி வந்தது. கடுந்தமிழ் என்றால் புரியாத தமிழ்; பண்டிதத் தமிழ் என்று பரிகாசம் செய்தது பத்திரிகையுலகம்.

எளிமை கடுமை இரண்டும் ஒரு பொருளின் இருவேறு தன்மைகள்; வெவ்வேறு நிலையில் பயன்படுவன. ஒன்றுக்கொன்று வேறுபட்டனவேயன்றி மாறுபட்டனவல்ல. ஆனால் இன்று இவையிரண்டுக்கும் பகை. இந்தப் பகையை வளர்த்தவர் நாம். ஒரு காலத்தில் கடுமை கடுமையென்று புரியாமற் பேசியும் எழுதியும் தமிழை வதை செய்தோம். மற்றொரு காலத்தில் எளிமை எளிமையென்று இழிவு செய்கிறோம். "விட்டால் தாடி; அடித்தால் மொட்டை" என்ற கோலம்.

பொதுவாகப் பழமை கடுமை என்றும் புதுமை எளிமை என்றும் கருதப்படுகிறது. கடுமை எளிமை இரண்டும் பலனைப் பொறுத்துப்

பொருள்படும் நிலையிலுள்ளன. மட்டையையுரித்து ஓட்டையுடைத்துத் துருவிப் பிழிந்த தேங்காய்ப்பாலின் சுவையால் - பயனால் உலகம் கடுமையை மறந்தது. மலையைக் கல்லி எலி பிடிக்கும்போதுதான் உலகம் சலித்து விடுகிறது. எளிமை என்பது வெறுமை - ஒன்றுமற்ற பாழ் என்பதானால் அதனைப் போற்றுவதெங்ஙனம்?

## உய்த்துணரவைக்கும் உத்தி

பேச்சாளரும் எழுத்தாளரும் கைக்கொள்ள வேண்டிய புத்தி இது. எல்லாவற்றையும் நீயே சொல்லிவிட்டால் எனக்கென்ன வேலை. உய்த்துணரவை. கலையுலகின் இன்ப ஊற்று இந்த உய்த்துணரவைப்பே. தலைசிறந்த பேச்சிலும் எழுத்திலும் நடிப்பிலும் சிற்பத்திலும் ஓவியத்திலும் இசையிலும் இந்த உத்திகையாளப்படுவதைக் கண்டுமகிழலாம்.

உடல் வலியாலன்றி நங்கையொருத்தியின் இன்ப நிலையங்களைத் தட்டியெழுப்பிக் கூடி மகிழ்ந்து மகிழ்விக்கும் காமநூல் வல்ல காளைபோல அறிவுலகத்தை இந்த உத்தியால் மகிழ்விக்கும் அறிஞர் மிகச்சிலரே.

மிருகப் புணர்ச்சியால் தன் தாகந் தீர்க்கும் காமுகன் போலத் தம் வேதனை தீர்க்கும் கலையுலகக் காமுகரும் மிகப் பலரே.

கடுமையாயினும் எளிமையாயினும் உய்த்துணரவைக்கும் உத்தியும் தெளிவும் மிக இன்றியமையாதன.

பார்ப்பா னகத்திலே
பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்மாரு மின்றி
வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டால்
வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுவைந்தும்
பாலாச் சொரியுமே

அடங்காது திரியும் ஐம்புலனையும் அடக்கினால் ஒருவன் அடையும் ஆற்றல் எத்தகையது என்பதைத் திருமூலர் உய்த்துணர வைக்கும் அறிவில் ஊறும் ஆனந்தமல்லவா?

தொல்காப்பிய உரையாசிரியருள் முதல்வராகிய இளம்பூரணர் சுருக்கமாக வெற்றுரையும் வீண் விளக்கமு மின்றித் தெளிவாக உரைப்பதில் வல்லவர். பரத்தையர் ஆவர் யாவர் என விளக்கவந்த இடத்து, "அவர் ஆடலும் பாடலும் வல்லராகி, அழகும் இளமையும் காட்டி, இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர் மாட்டும் தங்காதார்" என உரைக்கின்றார்.

இவற்றிலுள்ள தெளிவும் ஆழமும் உய்த்ணரவைப்பும் நம் உயிர்கலந்து உவட்டாமல் இனிக்கின்றது.

கடுமை, எளிமை இவற்றின் தன்மைகளை உணராமையால் வளர்ந்து பகையும் வெளிவரும் துன்பமும் கொஞ்சமல்ல. கடுமைக்கும் எளிமைக்கும் கடும்போர். கடுந் தமிழா? எளிய தமிழா? என்ற தலைப்பில் சொற்போர். பண்டிதத் தமிழா? பாமரத் தமிழா? என்று சிண்டு முடிந்துவிடும்போர், பத்திரிகைகளில் விவாத அரங்கம் பேச்சாளர்களையும் எழுத்தாளர்களையும் இரண்டு பிரிவாக்கிப் பத்திரிகையாசிரியர் என்ற மேதாவி சாவல் போர் நடத்துகிறார். எழுத்து என்கிற கூரிய கத்தி சாவலின் காலில் கட்டப்பட்டுள்ள கத்தி ஏற்படுத்திய காயங்கள், அவற்றிற் பெருகும் குருதி, காலத்தால் சீழ்பிடித்து நாற்றமெடுத்து ஆறியபோதிலும் வடுவாக்கி நிலைந்திருப்பதை அறிஞர் காண்பர்.

'நண்டெழுத்து வேண்டாம் நமக்கு' என்று ஈற்றடி கொடுத்து, சிறியை எதிர்த்துக் கவிதை வளர்த்தது ஒரு பத்திரிகை. கவிஞர்கள் கவிமழை பொழிந்தார்கள். கலா ரசிகர்கள் கவிதை வெள்ளத்தில் நீச்சல் அடித்தார்கள்.


ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் பாராட்டப்பட்ட

**அருமையான புத்தகங்கள்**

சுண்டிக்குழி ஆசிரியர் ஆசீர்வாதம்
அவர்களால் இயற்றப் பட்டவை

**படிமுறைக்கணிதம்:-** 2ம் வகுப்பு துவக்கம்
8-ம் வகுப்பு வரை தனித்தனிப் புத்தகங்கள்

**பயிலுந் தமிழ்:-** இரண்டு பாகங்கள்

**இலக்கண விளக்கமும் பயிற்சியும்**

**வியாபாரம் செய்வோருக்கு 20 வீதம் கழிவு உண்டு**

**ஆசீர்வாத அச்சகம்**

32, கண்டி வீதி. யாழ்ப்பாணம்.

# ஆனந்தக் கோனாரே!

ஆனந்தக்கோனார் செய்யாத தொழில் இல்லை. திரியாத ஊரில்லை, தெரியாத விஷயங்களில்லை. ஒன்றே ஒன்று பாக்கி இருந்தது. அதையும் வருகிற மார்ச்மாதம் செய்யப்போகிறார். அதாவது எலக்‌ஷனுக்கு நிற்கிறார்.

இந்த அசகாய சூரர் ஆனந்தக்கோனாருக்கு ஒரு குறை மட்டும் இருந்தது. ஒருமுறை தரையில் துண்டு விரித்துப் படுத்திருந்த பொழுது அவருடைய தலை, தலையணையில் இருந்து நழுவி தரையில் விழுந்ததால் முன் மண்டை சிதறி மூளை கொஞ்சம் 'அவுட் - ஒப் - ஓர்டர்' ஆகிவிட்டது.

அவருக்கு ஒரு துரதிர்ஷ்டம்; அவருக்கு வாய்த்த இல்லாள் ஒரு நாகரீகக் குஞ்சு — கடைசியாக பத்திரிகை விளம்பர வாயிலாக மாற்றி எஞ்சிய பெயர் சிலோன்மணி என்பதாம், அவரது புத்திர சிகாமணிக்கு படுசுட்டி என்று பெயர்.

இத்தனை சிறப்புக்கள் வாய்ந்த ஆனந்தக்கோனாரை கலைச் செல்வி வாசகர்களாகிய நீங்கள் அறிமுகப்பட்டுக் கொள்வதும் மாதா மாதம் சந்திக்கப்போகும் வாய்ப்பு ஏற்படுவதும் நீங்கள் செய்த தவப்பயனேயாம்.

படுசுட்டி படித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு ஏதோ ஒரு அடிக்கு பொருள் தெரியவில்லை. எல்லாம் தெரிந்தவரும் தந்தையுமான ஆனந்தக்கோனாரைக் கேட்டான். "அப்பா! காரிலும் விரைந்து வந்த காதலன் என்றால் என்ன பொருள்" என்று.

ஆனந்தக்கோனார் திருவாய்மலர்ந்தார்.

வேகமாகச் செல்லக்கூடிய வாகனங்களில் காரும் ஒன்று. வேகமாக ஓடக்கூடிய வாகனங்களில் நமது அவசரத்துக்கு சர்வ சாதாரணமாக கை தந்து உதவுவதும் அந்தக் காரே! ஆகையால் இந்தக் காதலன் இப்படிப்பட்ட காரிலும் விரைந்து வந்திருக்கிறான். ஒருவேளை யாழ்தேவியில் அல்லது ஆகாய விமானத்தில் வந்திருப்பானுக்கும்." என்று முடித்தார்.

—கொழும்பு சிவம்.

ஏ.
கே.
எஸ்.
அன்
ச
ன்
ஸ்

போன்.
519
*
உங்கள்
அபிமானத்திற்கும்
அன்பிற்கும்
உரிய
நகை வியாபாரிகள்

# நகை மாளிகை

63, 65, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்

# நோயற்ற வாழ்வு !

நீரிழிவு, வாதம், பீனிசம், தொய்வு, இரத்தக்கோளாறு
இவற்ருல் அவஸ்தைப்படும் பெருமக்கள்
நேரில் வந்து எம்மைச் சந்திக்கவும்.

குறைந் செலவில், கூடியவிரைவில்
குணமடைவீர்கள்.

## Dr. அ. வை. தங்கக்கணபதி,

[L. A. M., D. A. M., R. I. M. P.

## அம்பிகாபதி வைத்தியசாலை

**வழக்கம்பரை சுழிபுரம்.**

**கிளை** : சங்கானை கிழக்கு, பண்டைத்தரிப்பு,



இன்றே வாருங்கள்

## இன்ப நிலையத்திற்கு

- சுவையான சிற்றுண்டிகள், காப்பி, தேநீர்
குளிர்பான வகைகள்.
- சுத்தமான திறம் நல்லெண்ணெய்
- ருசிகரமான ஊறுகாய் வகைகள்.
- ஆனந்தவிகடன், கலைச்செல்வி, ஈழநாடு, பேசும்படம்
கதம்பம், இன்ப இரகசியம், கலை, இந்துநேசன்,
கங்கை.
- ஏராளமான துப்பறியும் நாவல்கள்,
மலிவுப்பதிப்புகள்.

# இன்ப நிலையம்

ஸ்டேசன் வீதி, : : சுன்ஞகம்.

# நோய்க்கு நோய் செய்யும் வித்தகர்சாலை

இன்று ஈழத்தின் வட பகுதியிலும் கீழ்பகுதியிலும் புதிய விழிப்பு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லி உணர வேண்டியதில்லை. மாணவர்களது பிற்கால வாழ்வு குறித்து தொழில் நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் உருவாகியது. ஒரு காலம் கள்வர் கூட்டம் மானத்தை வாங்கிக் கொடுந்தொழில் புரிந்த வல்லையான வல்லை வெளியிலே மக்கள் மானத்தைக்காக்க ஒரு நெசவு சாலையும் உருவாகப் பூர்வாங்க வேலைகள் நிகழ்கின்றன.

எது எவ்வாறுயினும் நோயற்றவாழ்வு எமக்கு வேண்டும். அதன்பின்புதான் எல்லாவற்றையும் அநுபவித்துத் தீரலாம். இந்த எண்ணத்திலே யாழ்ப்பாண மக்களுக்காக உழைப்பதற்கு முன்வந்தவர்தான் திருவாளர் **K. S. கந்தையா** அவர்கள்.

இவர் சிங்கப்பூரிலிருந்து தனது சொந்தக் கிராமமாகிய சுன்னுகத்திற்கு இளைப்பாறி வந்ததும், மக்களின் நலங்கருதி ஓர் வைத்திய சாலையை நிறுவினுர். வைத்திய சாலைக்கு **"மக்கள் வைத்தியசாலை"** என்றே பெயரும் வைத்து. நோயினுல் அல்லற்படும் நோயாளரைப் பராமரித்து நோய் தீர்த்து வருகின்ருர். பெயர் பெற்ற வைத்திய நிபுணரும் உலோகோபகாரியுமான **டாக்டர் எஸ். சுப்பிரமணியம் P. S.** அவர்களும், **டாக்டர் எஸ். எஸ். இராசநாயகம்** அவர்களும் வைத்தியர்களாக அமைந்திருக்கிருர்கள்.

பாலர், முதல் விருத்தர்வரை மக்களுக்கு ஏற்படும் சகலவிதமான நோய்களையும் மாற்ற வேண்டும் என்ற பெருநோக்கோடு உழைத்து வருகிருர். பலர் நோய் குணமாகிப் பாராட்டவும் கேட்டிருக்கிறோம். சத்திர சிகிச்சைகளும் வேண்டிய போது உதவுகிருர். சத்திர சிகிச்சைக்கு நிறுத்தி மனமுடைந்து வேறு வைத்திய சாலைகளிலிருந்து திரும்பிவந்து இவரது ஆலோசனையைக்கேட்டுப் பலர் சத்திர சிகிச்சையில்லாமலே நடைமுறை வைத்தியத்தில் சுகமடைந்திருக்கின்றனர். சுன்னுகத்து இளைஞர் செல்வன் எஸ். எஸ். மகாலிங்கம் அவர்களே உதாரணம்.

முற்போக்கு மனப்பான்மையிலே மக்கள் வசதிகளை எத்துறையிலும் கவனித்து வைத்தியம் உதவிவரும் **மக்கள் வைத்தியசாலையும்** அதன் ஸ்தாபகர் திருவாளர் **K. S. கந்தையா** அவர்களும்

தொடர்கதை:-

# உனக்காக கண்ணே!

— சிற்பி —

நினைவூட்டுகிறோம்: மட்டக்களப்பு பாரதி கல்லூரியின் ஆசிரியர் சண்முகம் பீ. ஏ. சாவித்திரி என்னும் சக ஆசிரியையுடன் நெருங்கிப் பழகுவதைப்பற்றி யாரோ வதந்தி ஒன்றைப் பரப்பிவிடுகிறார்கள் என்பதை ஆசிரியர் பத்மநாதன் மூலம் அறிகின்றான். மனம் கலங்கி மட்டக்களப்பை விட்டுப் புறப்பட்ட அவன், பால்ய நண்பன் பரமேஸ்வரனுடன் கொழும்பிற்குச் செல்கின்றான். பரமேஸ்வரன் - ரூபமதி ஆகியோரின் தொடர்பு சண்முகத்தைப் புதிய மனிதனுக்குகிறது. மட்டக்களப்பிற்குத் திரும்பிச்சென்ற சண்முகம், சாவித்திரியை அவள் வீட்டிலேயே சந்திக்கின்றான். இதயங்கள் இரண்டும் இணைகின்றன. அவர்கள் போக்கில் அநியாயமாகத் தலையிடும் பத்மநாதன் மேல் சிறிது சந்தேகம் எழுகின்றது. அதேநேரத்தில் ஊரிலிருந்து வந்த தந்தியொன்று அவனை அதிர்ச்சியடையச் செய்கிறது-- இனி, மேலே படியுங்கள்.

## 8. உறுதியான முடிவு.

நேரம் ஏறிக்கொண்டேபோனது. அதிர்ச்சியிலிருந்து சிறிது சிறிதாக மீண்ட அவன் நெஞ்சில் ஆத்திரமும் ஏறிக்கொண்டேபோனது. நூறு தடவைக்குமேல் தந்தியின் வாசகங்களைப்படித்துவிட்டான். நூற்றைம்பது தடவைக்குமேல் தந்தியின் முகவரியையும் அனுப்பியவரின் பெயரையும் அவதானித்துவிட்டான்.

"கல்யாணம் நிச்சயமாய் விட்டது. உடனே புறப்பட்டுவா—சுந்தரமூர்த்தி."

அந்த வார்த்தைகள், அசல் கருங்கல்லில் ஆளமாகப் பதிந்துள்ள அழிக்கமுடியாத எழுத்துக்களாகி அவனை ஆத்திரமடையச் செய்தன; ஆட்டி அலைக்கழித்தன; அருவருப்பையூட்டின.

'கல்யாணம் செய்வது நானா, அல்லது அப்பாவா? வாழவேண்டியவன் நான். எனது எதிர்கால மனைவி எப்படிப்பட்டவளாக இருக்கவேண்டும் என்று தீர்மானிக்கும் உரிமை கூட எனக்கு இல்லையா? அப்பா எனக்காகப் பாடுபட்டார்; படிக்கவைத்தார்; ஆளாக்கினார். நானும் அப்பாவிற்கடங்கிய அருமந்த பிள்ளையாகத் தானே வாழ்ந்தேன்! அவ்வளவு தூரம் அடங்கிப் பணிந்து போக, கடைசியில் அணுகுண்டையே தூக்கிப் போட்டுவிட்டாரே. அப்பா! படித்துப் பட்டம் பெற்ற உங்கள் மகனுக்கு மனதுக்குப் பிடித்தவளுடன் மகிழ்ச்சியாக வாழும் உரிமையை அளிக்கமாட்டீர்களா ?—ம்... நீங்கள் அளிக்கப்போவதில்லை. என் உரிமையை நிலைநாட்டாமல் நானும் இருக்கப் போவதில்லை. ஆமாம்! பணி

வும் அடக்கமும் என்னைப் படுகுழியில் தான் தள்ளிவிடும்......'

அவன் ஆத்திரப்பட்டான்.

'சாவித்திரிக்கு இந்தச் செய்தி எட்டினல், அவள் துடித்துப் பதைக்க மாட்டாளா? துன்பத்தீயில் பொசுங்கிப் போகமாட்டாளா? ஐயோ, சாவித்திரி! சற்று முன்பு தானே, அடங்கியிருந்த ஆசைகள் அத்தனையையும் உன் முன்னுல் அவிழ்த்து விட்டேன்! நீ எனக்கு உணவு மட்டுமா தந்தாய்? உன் உயிரைக் குழைத்தல்லவா என் உதிரத்தில் கலக்கச் செய்தாய்! என் உடம்பின் ஒவ்வொரு அங்கமும், அந்த அங்கங்களின் ஒவ்வொரு அணுவும் உன்னை நினைத்துத் தானே உயிர் வாழ்கின்றன; உன்னைக் கண்டுதானே உவகைபடைகின்றன. நீ இல்லாவிட்டால்......? நீ இல்லாவிட்டால்......? சாவித்திரி! முரட்டுப் பிடிவாதக்காரரான அப்பா உன் அருமையை உணராது எம் அன்புத் தொடர்பை அறுத்தெறிந்தால்...... சாவித்திரி! ஐயோ, சாவித்திரி...!

அவன் ஆட்டி அலைக்கழிக்கப்பட்டான்.

'அப்பாவிற்கென்ன, பணமும் அந்தஸ்தும் கௌரவமும் தான் முக்கியம். தன்னுல் ஈட்டமுடியாத பணத்தை, என்னைக் கருவியாக்கி அடையப்பார்க்கின்ருர். அடி நாளிலிருந்தே, பணக்காரப் பரமசிவத்தின் பெண் பார்வதியை எனக்குக் கட்டிவிடவேண்டுமென்பது அவர் எண்ணம். அந்தப் பார்வதி...! சீ..! அட்டைக்கரி. தொட்டாலே ஒட்டிக்கொள்ளும் கறுப்பு. உடம்புதான் கறுப்பென்ருலும் உள்ளமாவது வெள்ளையாக இருக்கக்கூடாதா? தான் பணக்காரி என்ற கர்வம் அதிகம். படித்து நல்ல நிலையிலுள்ள ஏழைகளைக் கண்டாலே வீணுக எரிச்சல்படுவாள். சாவித்திரியை நினைத்துப் பார்த்த மனத்தால் இந்தச் சனியனையும நினைப்பதா...?'

சண்முகத்தின் மனம் அருவருப்படைந்தது.

தந்தி இன்னமும் கையிலேதான் இருந்தது. அதைச் சுக்கு நூருகக் கிழித்தெறிந்தான்.

தந்தியைக் கிழித்தெறிந்தானே தவிர, அது சுமந்து வந்த செய்தியை அவனுல் இலேசில் மறக்கமுடியவில்லை. நிமிடத்திற்கு நிமிடம், அனுமார் வால்போல் வளர்ந்து, அவன் உடலைச் சுற்றி அவன் நரம்புகளையே நெருடியது.

தந்தியில் கண்டபடி, ஊருக்குச் செல்வதா? வேண்டாமா?

ஊருக்கு உடனே போகத்தான் வேண்டும். இப்போது சென்ருல்த்தான் இந்த ஏற்பாடுகளையெல்லாம் நேரத்தோடேயே மாற்றியமைக்கலாம். போகாமலிருந்தால், காலங் கடந்துவிட்டது என்ற காரணத்தைக் காட்டியே, அந்த அட்டைக் கரியை அவன் தலையில் கட்டியடித்துவிடுவார்கள்.

உணர்ச்சி வேகத்தில் தாறுமாருகப்பேசி ஏதாவது அசம்பாவிதம் நடந்தாலுங் கூட அவன் பயப்படப் போவதில்லை. அவனிடம் போதிய துணிவு பிறந்துவிட்டது. அன்னையும் தந்தையும் அயலவர்களும் நண்பர்களும்சேர்ந்து அவனைக் கண்டிக்கவோ தண்டிக்கவோ முடியாது. காதற்சாவித்திரியின் கடைக்கண் பார்வையிலே காற்றில் ஏறி அவ் விண்ணையும் சாட அவன் தயாராய் விட்டான்.

சரியாக எட்டு மணிக்குப் புகைவண்டி தெல்லிப்பளை ஸ்டேசனை அடைந்தது. சண்முகம் எதிர்பார்த்தபடி அவனை வரவேற்பதற்கு

அங்கே எவருமே வந்திருக்கவில்லை. அவர்கள் பரம்பரைச் சொத்தாகிய அந்தப் பழைய 'வில்லுவண்டி'யைத் தேடினன். அதுவும் இல்லை. 'கார்' என்று பெயர்படைத்த ஒரு கரிய வாகனம், புகைவண்டியின் பெரு மகன் போல் ஸ்டேசன் சுவருடன் இணைந்து நின்றது. அதற்குள் ஏறி உட்கார்ந்துகொண்டு, கொல்லங்கலட்டிக்குச் செல்லும்படி அதன் சாரதியிடம் கூறினன்.

தெல்லிப்பழையிலிருந்து கொல்லங்கலட்டியிலுள்ள அவனுடைய வீடு மூன்று மைல்களுக்கு மேல் இருக்காது. நடந்து சென்ருலே கால் மணித்தியாலத்தில் வீட்டை அடைந்து விடலாம். ஆனல் அன்றைக்குப் பாதை மட்டுமல்ல நேரமுமே நீண்டு கொண்டு போனது. திட்டியும் பள்ளமுமாக இருந்த அந்தக் கற்பாதையில் அவனுக்கு வாய்த்த வாகனம், நர்த்தனமாடிய பொழுது ஏதோ ஒரு பயங்கர உலகத்திற்கு அநியாயமாக இழுத்துச் செல்லப்படும் உணர்வுதான் அவனுக்கு ஏற்பட்டது.

கற்பாதையிலிருந்து 'உடையார் வளவி'ற்குச் செல்லும் செம்பாட்டு ஒழுங்கையில் கார் இறங்கியது. ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் சிறுமியருமாக சண்முகம் 'பவனி' வருவதை அதிசயத்துடன் பார்த்தார்கள். தங்கள் ஊர் தேடி வந்த அந்த 'ரயில் குட்டி' யைப் பார்க்கும் வாய்ப்பை இழந்து விட விரும்பவில்லை. சண்முகத்தை அடையாளம் கண்டுகொண்ட சிலர், தம் தோளிலிருந்து சால்வையை எடுத்து மரியாதை செய்தனர்.

கார் அவன் வீட்டு வாசலில் நின்றது. உரிய பணத்தைச் சாரதியிடம் கொடுத்து அதற்கும் 'பிரியா

கல்யாணத்தை எதிர் நோக்கிக் கலகலப்புடன் இருக்கும் வீடா அது? வீட்டு வராந்தாவில் எவருமே இல்லை. அங்கு நிலவிய அசாதாரண அமைதி அவனுக்குப் பீதியை ஊட்டியது.

''அம்மா... அம்மா...''

''இப்பதான் வந்தனியா... வா.. வா...'' தாயின் அழைப்பில் உயிரில்லை. கண்கள் கலங்கியதைப் போல் குரலும் கம்மியது.

''அம்மா! என்னம்மா இது? ஏன் இப்படி ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?'' சண்முகம் பதறிப்போய்க் கேட்டான்.

தாயினல்பதில்கூற முடியவில்லை. மாலை மாலையாகக் கண்ணீர் சொரிந்தாள். நடுங்கும் கரங்களினல், சண்முகத்தின் கைகளைப் பிடித்தபடி உள்ளே அழைத்துச் சென்ருள்.

சண்முகத்தின் நெஞ்சு 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது.

அறையின் நடுவே, மரக்கட்டிலின் மேல், போர்த்து மூடிக் கொண்டு அவன் தந்தை சுந்தரமூர்த்தி படுத்திருந்தார் அவர்களுடைய குடும்ப நண்பர்கள் சிலர் கவலை தோய்ந்த முகத்துடன் அருகே நின்றனர். சுந்தரமூர்த்தியின் முனகல் சத்தம் மட்டும் அடிக்கடி அங்கிருந்த அமைதியைக் கலைத்துக் கொண்டிருந்தது.

''அப்பா... !''

சண்முகத்தின் அலறல் சத்தம் அந்த வீட்டையே அதிரச் செய்தது. அப்படியே தந்தையின் படுக்கையில் போய் விழுந்தான். அருகில் நின்றவர்கள் அவனைத் தூக்கி நிறுத்தினர்கள். குழறியழும் அவன் வாயைப்

"இவ்வளவு நேரமும் உன்னைப் பற்றியே விசாரித்துக் கொண்டிருந்தார். இப்போதுதான் சிறிது கண்ணயர்ந்திருக்கிறார். அவருடைய நித்திரையைக் குழப்பாதே"

"அப்பா... அப்பா..." தந்தையின் பரிதாப நிலையை மறக்க முடியாத சண்முகம் முனகினான்.

"சண்முகம்! நீ என்ன சின்னக் குழந்தையா, நிலைமை தெரியாமல் புலம்புவதற்கு? என்னுடன் வெளியே வா, எல்லாவற்றையும் விபரமாகச் சொல்கின்றேன்." இதுவரை மௌனமாயிருந்த, அவன் மதிப்பிற்குரிய ஆசிரியர் கந்தசாமி அவனுடைய தோளைப்பற்றி, அவனை வெளியே அழைத்துவந்தார்.

"இதெல்லாம் என்ன வாத்தியார்? அப்பாவுக்கு என்ன வருத்தம்? நீங்களாவது சொல்லமாட்டீர்களா?"

"அப்பாவுக்கு என்ன வருத்தம் என்பதை டாக்குத்தர்கூட இன்னும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் நிலைமை கொஞ்சம் ஆபத்துத்தான் சண்முகம்."

"ஆ... ஆபத்தா?... அப்பா..."

"சண்முகம்!" கந்தசாமி அதட்டினார். "பொறுப்புணர்ச்சியுடையவன் என்று நினைத்துத்தான் வெளிப்படையாகவே எல்லாவற்றையும் கூறினேன். பச்சைக் குழந்தை மாதிரி அழுதால் ஊர் முழுவதும் கூடிவிடும். தந்தை இருக்கின்ற நிலையில் அவருக்கு அதிர்ச்சி தரக்கூடியதாக நாம் எதையும் செய்துவிடக் கூடாது."

ஆசிரியர் கந்தசாமியின் சொல்லுக்குச் சண்முகம் எப்போதுமே மதிப்பளிப்பவன். அவனுடைய படிப்பிற்காகப் பணம் கொடுத்தவர், சுந்தரமூர்த்தி என்றால், அவனுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்துப் பண்பையும் ஊட்டியவர் கந்தசாமி. அவர்களுடைய குடும்பத்தின் நெருங்கிய நண்பர். அவர்களுக்கு ஏற்படும் சுகதுக்கங்களில் கலந்துகொள்பவர். அத்தகைய அன்பிற்குரியவரின் ஆத்திரத்தைத் தூண்ட விரும்பாது சிறிது நேரம் மௌனமாக இருந்தான் சண்முகம்.

"ரயிலில் வந்த நீ, எதுவுமே சாப்பிடாமல் இருக்கின்றாய். உடைகளை மாற்றி கை கால்களைக் கழுவி, ஏதாவது சாப்பிட்டுவிட்டு வா, வேறு சில முக்கிய விஷயங்களை உன்னிடம் சொல்லவேண்டும்."

இயந்திரம் போல் எழுந்து சென்றான் சண்முகம். வீட்டிலுள்ள ஒவ்வொரு பொருளிலும் துக்கத்தின் சாயல் தென்பட்டது. தந்தையைப் பிரியப் போகின்றோம் என்ற உணர்வு அடிக்கடி எழுந்து அவனைச் சித்திரவதை செய்தது.

தாயைக் கண்டவுடன் மறுபடியும் அழுகை 'பொத்துக்' கொண்டு வந்தது. இருவருமே அழுதனர். தாய் கொடுத்த உணவை அவனால் உட்கொள்ளவே முடியவில்லை. தேநீரால் தொண்டையை நனைத்துக் கொண்டு ஆசிரியரைத்தேடி வெளியே வந்தான்.

"கல்யாணச் செய்தியை அறிவித்த அப்பாவை, இந்தக் கோலத்தில் காண்பேன் என்று நான் கற்பனைகூடப் பண்ணவில்லை வாத்தியார். என்னைக்கேளாது என் கல்யாணத்தை நிச்சயப் படுத்தி விட்டாரே என்பதற்காக அவரை எதிர்த்துப்பேச எண்ணினேன். திட்டித் தீர்க்கத் திட்டமிட்டேன்...... கடைசியில் 'வாடா சண்முகம்' என்று கூட அழையாது வாய்மூடி மௌனியாகி, வாடிப்போய்க் கிடக்கின்றாரே, வாத்தியார்!"

சண்முகத்தைச் சாந்தப்படுத்தி விட்டுக் கந்தசாமி நடந்த விஷயங்

கள் எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறினார்.

"சண்முகம்! உன்னிலும் பார்க்க உன் அப்பாவை நன்கு உணர்ந்து கொண்டவன் நான். வெள்ளைக்காரன் கொடுத்த உத்தியோகத்தையும் உதறிவிட்டு, வேளாண்மை செய்வதையே மானமுள்ள தொழிலாக விரும்பிக் கைக்கொண்டவர் அவர். இந்தக்காலத்து இளைஞர்களின் இலட்சியங்களையும் ஆசைகளையும் அவர் அலட்சியப் படுத்தியதில்லை. அதனாற்றான் உன்னைப் படிக்க வைத்தார். பண வசதி இல்லாதிருந்த போதும் பல்கலைக் கழகத்திற்கும் அனுப்பி உன்னைப் பட்டதாரியாக்கினார். பணத்திற்காக அவர் கஷ்டப்பட்டபோதெல்லாம் பரமசிவம் கை கொடுத்தார். தானாகவே முன்வந்து கடன் கொடுத்தார். ஆனால் கடைசியில் அந்தக் கருமி பரமசிவம் இப்படிச் செய்வார் என்று உன் அப்பா கூட எதிர்பார்க்கவில்லை."

"என்ன வாத்தியார்? பரமசிவம் என்ன செய்துவிட்டார்?" சண்முகத்திற்கு எல்லாமே குழப்பமாயிருந்தது.

"உன் படிப்பு முடியும் வரைக்கும் எந்தவித முணுமுணுப்புமின்றிப் பணத்தைக் கொடுத்தார் அவர். அவருடைய அந்தத் தயாள குணத்தை உன் அப்பா போற்றாத நாளே கிடையாது ஆனால் உன் படிப்பு முடிந்து நீ ஆசிரியனாக அமர்ந்ததும் பரமசிவத்தின் குணமே மாறிவிட்டது. கொடுத்த கடன் முழுவதையும் வட்டியுடன் உடனே திருப்பிக் கொடுத்து விடவேண்டுமென்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். இன்னும் சில மாதங்கள் பொறுத்துக் கொள்ளும்படியும், உன் சம்பளத்திலிருந்து மாதாமாதம் கொடுத்துக் கடனை அடைத்து விடுவதாகவும் நாங்கள் இருவரும் சென்று கூறினோம். அவர் அதற்கும் மசியவில்லை. கடைசியில் ஒரு வாரத் தவணை கேட்டுக்கொண்டு வந்தோம்.

அந்த ஒரு வாரத்துக்குள் உன் அப்பாவும் நானும் செல்லாத இடமில்லை கேட்காத ஆட்களில்லை. பணம் படைத்தவர்களுக்கு முன்னால் பல்லுக்காட்ட வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுவிட்டதே என்று பச்சாத்தாபப்பட்டார் அப்பா. ஆனால் பலன்தான் பூஜ்யமாகிவிட்டது. ஒரு வாரத் தவணை முடிந்ததும் பரமசிவமே வீடு தேடி வந்தார்.

மேலும் சில நாட்கள் பொறுக்கும்படி உன் அப்பா கேட்டார். கொதித்தெழுந்தார் பரமசிவம்.

'உமக்குக் கொடுத்த பத்தாயிரம் ரூபாவும் என் மகளின் சீதனத்திற்குத் தேவை. நாளை விடியுமுன் பணம் முழுவதும் கொடுத்து விடவேண்டும். அல்லது உம் மகனுக்கு என்னுடைய மகளைக் கல்யாணம் செய்து வைக்க வேண்டும்.''

பரமசிவத்தின் சுயரூபம் இப்போதுதான் வெளிப்பட்டது. இவ்வளவு காலமும் கடன் கொடுத்த தன் காரணம் இப்போதுதான் தெரிந்தது. இந்தத் திட்டத்தை மனத்தில் தீட்டிக் கொண்டுதானா இவ்வளவு காலமும் கர்ணன் வேஷம் போட்டார்? பண்பற்ற பகட்டுக்காரியான தன் மகளுக்கு மணம் செய்து வைக்கத்தானா பணவுதவி செய்தார்?

உன் அப்பாவினால் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. வாய்க்கு வந்தபடி பரமசிவத்தைப் பேசத் தொடங்கிவிட்டார். பரமசிவமும் விட்டுக் கொடுக்கவில்லை. "பிச்சைக்கார நாயே!" என்று திட்டுமளவிற்கு அவர் வார்த்தைகள் வளர்ந்துவிட்டன

நிலைமை மோசமடைவதற்குமுன்

## மாணவர்- குழந்தைகள் திட்டம்

பல மாணவர்களினதும், கல்லூரி ஆசிரியர்களினதும் வேண்டுகோளுக்கிணங்கி, விண்ணப்பம் ஏற்கும் கடைசித் திகதியை 20-3-60 ஆக மாற்றியுள்ளோம் இதுவரை விண்ணப்பங்களை அனுப்பாதவர்கள் உடனே அனுப்புக.

சித்திரை மாதத்திலிருந்து இத்திட்டம் நடைமுறைக்கு வருகின்றது.

நிர்வாகி
மா. கு. திட்டம்.

---

## கவிஞர்களே!

பசுமையான தோட்டத்தில் பிஞ்சுக் குழந்தையொன்று பொக்கு வாய்ச் சிரிப்புடன் காட்சியளிக்கின்றதல்லவா? போட்டோக் கலை நிபுணரான **சுன்னுகம் 'பிறின்ஸ்' நடராஜா** அவர்கள் படத்தையும் 'புளக்' கையும் உதவியுள்ளார்கள்

இப்படத்தைப் பார்த்ததும் உங்கள் கவியுள்ளத்தில் என்ன தோன்றுகிறது? அதைக் கவிதை உருவத்திலே எழுதியனுப்புங்கள். முதலிடம் பெறும் கவிதை அடுத்த இதழில் வெளியிடப்படும்

தரமான கவிதைகளை எழுதிய மற்றையோரின் பெயர்கள் கலைச்செல்வியில் வெளியிடப்படும். தொடர்ந்து ஆறு மாதங்கட்குப் பத்திரிகை இலவசமாக அனுப்பப்படும்.

முடிவு திகதி 20 2.60.


# யாழ்ரதம் ராக்ஸி

**பிடியுங்கள்!**

**மைலுக்கு 60 சதம்**

- குறைந்த செலவில் வசதியான பிரயாணம்.
- பணிவு. உற்சாகம், நேர்மையுள்ள சாரதிகள்.
- நிதானமானசலார்-- நீங்கள் கொடுப்பது மீட்டர் காட்டுவதையே.
- வாக்குவாதம் வேண்டாம்-மீட்டரைக் கவனியுங்கள்.
- பிரயாணிகள் இன்சூர் செய்யப்பட்டுள்ளனர்.
- முக்கியமான இடங்களில் பிடிக்கலாம்

டெலிபோன் இலக்கம் பின்னர் அறிவிக்கப்படும்.

## யாழ்ரதம் லிமிடெட்

7, கே. கே. எஸ். வீதி, : : யாழ்ப்பாணம்

# கலைச்செல்வி வளர்கிறது

கலைச்செல்வியின் வளர்ச்சிக்கு மாதாமாதம் பணமுதவும்படி தமிழன்பர்கள் பலரைக் கேட்டிருந்தோம். எங்கள் வேண்டுகோளிற்கிணங்கிக் கீழ்க்கண்ட தமிழபிமானிகள் ஒவ்வொரு மாதமும் பணம் அனுப்பி வருகின்றார்கள். இவர்களனைவருக்கும் எமது மனங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், இலக்கியப் பத்திரிகையை வளர்க்கும் இப்பணியில் பங்கு கொள்ளும்படி மற்றைய அன்பர்களையும் பணிவுடன் அழைக்கின்றோம்.

## நிதியுதவுவோர்

1. திரு. தி. ச. வரதராசன், யாழ்ப்பாணம்
2. ,, அ. சுந்தரலிங்கம் B. A. கைதடி
3. ,, கே. சின்னத்துரை, பெரிய நீலாவணை
4. ,, ம. சண்முகலிங்கம் B. A. திருநெல்வேலி
5. ,, மு. பரமேஸ்வரன் B. A. நல்லூர்
6. ,, K. சிவகுமாரன் சுன்னாகம்
7. ,, தி. விஸ்வநாதக் குருக்கள் உடுவில்
8. ,, கு. சோமசுந்தரம் B. A. கல்வயல்
9. ,, சி. கார்த்திகேசு திருநெல்வேலி
10. ,, T. நவரத்தினம் B. A. கட்டுவன்
11. ,, M. கதிரிப்பிள்ளை B. A. மல்லாகம்
12. ,, மட்டுநகர் S. சிவகுமாரன் வெள்ளவத்தை
13. ,, கு. பாலசுந்தரக் குருக்கள் B. A. மாவிட்டபுரம்
14. ,, வ. நடராஜா குரும்பசிட்டி
15. ,, க சுப்பிரமணியம் யாழ்ப்பாணம்
16. ,, எஸ். எல். சவுந்தரநாயகம் இலுப்பைக்குளம்
17. ,, அ. க. சர்மா B. Sc., கொழும்பு
18. செல்வி சொ. தனபாலசிங்கம் B. A. உடுவில்
19. ,, புஷ்பா இராஜரெத்தினம் B. A. வேலணை
20. ,, சா. கனகசபை B. A. கரம்பொன்
21. ,, ப. சீனிவாசகம் B. A. கந்தர்மடம்
22. திரு. க. சொக்கலிங்கம் நாயன்மார்கட்டு

பணம் அனுப்பவேண்டிய முகவரி: திரு. சி. பொன்னம்பலம்
மே-பா கலைச்செல்வி சுன்னாகம்

---

யாழ்-தமிழ் இலக்கிய மன்றத்திற்காக, திருநெல்வேலி சு. இராசநாயகம், B. A. அவர்களால் சுன்னாகம், கலாதேவி அச்சகத்தில் அச்சிடுவித்து வெளியிடப்பட்டது. நிர்வாக ஆசிரியர்: சி. சரவணபவன், B. A.

# FANCY PALACE

## THE HAPPY PALACE

WITH

# HAPPY GIFTS

- ரேயல் தலைமுடிகள்
- ரேயல் சுவர்க்கடிகாரங்கள்
- ஷெவ்வேர்ஸ் பவுண்டன் பேனாக்கள்

ஆகியவற்றிற்கு

# யாழ்ப்பாணத்தில்

## ஏக விநியோகஸ்தர்கள்

கண்ணைக் கவர்ந்து மனதை மயக்கும்

பலவிதமான

# பரிசுப் பொருட்களை

## விசேட தினங்களில்

உங்கள் உற்றார் உறவினருக்கும், நண்பர்களுக்கும்,

பேனா நண்பர்களுக்கும்

## வாங்கிக் கொடுங்கள்

தந்தி : Fancyware　　போன் : 239

# பான்ஸி பலஸ்,

27, மெயின் வீதி : : யாழ்ப்பாணம்

# மக்கள் வைத்தியசாலை

கே. கே. எஸ். வீதி. சுன்னுகம்

ஸ்தாபிதம் 28-11-58

மக்கள் நன்மையையும் வசதியையும் சுகாதார வாழ்க்
கையையும் நோக்கமாகக் கொண்ட சிறந்த
வைத்தியசாலை இதுவே

தினந்தோறும் திறக்கப்படும் நேரம்
காலை 7-30 தொடக்கம் மாலை 9 மணி வரை

உயர்தர சிகிச்சை பெற உதவுமிடம்
மக்கள் வைத்தியசாலையே

WE POSSESS ALL LATEST PATENT
MEDICINES FOR SALE

SERVICE AVAILABLE DAY AND NIGHT
OUR MOTTO IS SERVICE

# PEOPLE'S DISPENSARY
## CHUNNAKAM

MANAGING PROPRITER:- Mr. K. S. KANDIAH